திராவிடநாடு

20 ... | வார வெளியீடு

# அறப்போர்

—[ சுரா ]—

இந்திய மன்றில், திராவிட
இன விடுதலைக் குரல் கேட்டோர்
இந்தியக் கண்ட மெங்கும்
எதிர்ப்பணி திரட்டுகின்றார்!

எழுந்தாடும் கடலினையும்
கிளர்ந்தெழும் ஒளியினையும்
சூழுலாவும் காற்றினையும்
தாழென்றால் தாழ்ந்திடுமோ?
வீழென்றால் வீழ்ந்திடுமோ?
இயற்கையால் எழுந்துவிட்ட
கனவுணர்வு எழுச்சியினை
செயற்கையால் வீழ்ச்சியுறச்
செய்வதுதான் முடிவதுண்டோ?
கார்மறைத்த கதிரவனொருநாள்
கதிர்பரப்பிக் கிளம்புதல்போல்
மூளும்பகை முறிந்தழிய
நாளும்கழகம்; அறப்போரிடும்!
மாளும் அடிமை!மீளும்திராவிடம்

# காதலில்லாக் கதை

தமிழ்மணி திரைப்பட அரங்கத்தை ஒட்டிச் செல்லும் வீதிக்கு வட புறத்தில் இருந்த நாலைந்து சிற்றுண்டி விடுதிகள் நடுத்தர எளிய வகுப்பினர்களுக்குப் பெரும் சேவை செய்பவை. கடைகளுக்கு பெரும் பாலும் கதவோ — பூட்டோ கிடையாது. இருபத்துநான்கு மணிநேரமும் சாயா கிளாசுக்கு வேலை இருந்துகொண்டேயிருக்கும்.

சட்டைப் பையில் போட்டிருந்த சில்லரையை எடுத்து மூன்ருவது தடவையாக எண்ணிப் பார்த்துக் கொண்டான் செல்வன். அந்த ஒன்பது புதுக் காசுகள் அவனைப் பரிதாபமாகப் பார்ப்பதுபோல் காட்சியளித்தன; இன்னும் சிறிதுநேரத்தில் கைமாறப்போகும் அவலத்தை நினைத்து. கடைகிட்ட வரவர அவன் நடை துரிதமாகியது. சாயா ஒன்று, உறைப்பு வடையொன்று. இது தான் அவன் மனதில் அப்பொழுதிருந்த ஆசை:

“ஒரு வடைகொடுங்க” அனுயாசமாகக் கடைக்காரப் பையனிடம் உத்தரவை வீசி எறிந்துவிட்டுப் பெஞ்சில் உட்கார்ந்தான் செல்வன்.

வடைகளின்மேல் படிந்திருந்த எண்ணெயின் மினுமினுப்பு,பத்தியக்காரனையும் சாப்பிடச் செய்துவிடும் வலிமைபெற்றது. நகரங்களில் பெரிய உணவு விடுதிகளில் ‘பண்டங்கள் தனி நெய்யில் செய்யப்பட்டவை அல்ல’ என்று சுற்றி வளைத்துப்போடும் அறிவிப்புப் பலகைகளைப் போலல்லாமல், ‘பண்டங்கள் கடலை எண்ணெயில் தயாரிக்கப்பட்டவை’ என்று சுருக்கமாக, வெளிவாகத் தொங்கவிடப்பட்டிருந்தது அறிவிப்புப் பலகையொன்று.

சாப்பிட்டு முடித்து கையில் படிந்திருந்த எண்ணெயைத் தாளால் ஒற்றி எடுத்துக்கொண்டிருந்தான் செல்வன். அப்பொழுது அவன் அந்தத் தாளில்கண்ட அதிசயம்......? வியப்பு மேலீட்டு அவன் விழிகள் விரிந்தன. உதடுகள் துடிக்க ஆரம்பித்தன. அடக்கவொண்ணு மகிழச்சிப் பெருவெள்ளத்தில் அவன் உள்ளம் மூழ்கி எழுந்தது.

ஆனுல், அடுத்த கணமே ஏமாற்ற இருள் அவனைக் கப்பிக்கொண்டது. துன்பச் சுமையைத் தாங்கமுடியாமல் தலைகனத்தது.

இதயத்துடிப்பின் வேகம் தணிந்து சமநிலைப்பட்டு, அவன் நினைவு சென்ற ஆண்டில் மேற்கொண்ட “வஞ்சம்” போட்டியை எண்ணிச் சுழன்றது.

தமிழகத்தின் பல்வேறு இடங்களிலிருந்து வரும் பத்திரிகைகளில் செல்வன் கண்ணில் படாதது

**வெ. தியாகராசன்**

இல்லையென்றே கூறலாம், தினசரிப் பத்திரிகைகளிலிருந்து திங்கள் பத்திரிகைகள் ஈருக அவன் பாராதது, படிக்காதது அரிதே. பிரபல நாவலாசிரியர்களைத் தன் நண்பர்களைப்போலவே பாவிப்பான். அவர்களின் படைப்புகளைப்பற்றிப் பெருமையோடும் ஆணித்திறத்துடனும் விமர்ச்சிப்பான். இப்படி இருக்கும்போதுதான், அவனுக்கும் அந்த ஆசை எழுந்தது. தாமும் ஏன் எழுத்துத் துறையில் நுழையக்கூடாது! கதை எழுதினுல் என்ன? என்பன போன்ற வினுக்கள் சதா அவன் உள்ளத்தை உறுத்திக்கொண்டேயிருந்தன. நாளடைவில் அதன் பலன்—

வாரப் பத்திரிகையான “வஞ்சம்” செல்வனின் கண்களில் பட்டுச் சிக்கிக்கொண்டது. அதில் அறிவித்திருந்த சிறுகதைப் போட்டியில் கலந்துகொள்வதென முடிவுசெய்தான். முதற்பரிசு ரூபாய் ஆயிரம்! தனக்குத்தான் என்று நிச்சயமாக நம்பிக்கொண்டு கதை எழுத முனைந்தான்.

வீட்டில் கைத்தறிகளின் கடபுடா ஓசைகளுக்கூடே அவன் கற்பனை தடைபட்டது. எனவே ஊருக்கு ஒதுக்குப்புறத்திலிருந்த தோட்டமொன்றில் தன் சிந்தனைக் கருவை அற்புத உருவாக்கப் புறப்பட்டான் செல்வன்.

எண்ணங்கள் எழுத்துருப்பெற்றன; வெள்ளைக் காகிதங்கள் மைக் கோலத்தால் தீட்டப்பட்டன.எழுதிய கதையைப் படித்தான். “அற்புதம்! பிரமாதம். இவ்வளவு அழகாகவும் நமக்குக் கதை எழுத வருகிறதே! அடடா, இவ்வளவுநாளும் துணிவின்றி நாம் எழுதத் தலைப்படாததினுல் எழுத்துலகுக்கு எவ்வளவு பெரிய கேடு. வாசகப் பெருமக்கள் மனமில்லாமல் எத்தனை சிரமத்துடன் உப்புச்சப்பில்லாத எழுத்தாளர்களின் கதைகளைப் படித்துச் சலிப்படைந்திருப்பார்கள். என்னே என் துணிவின்மை, அறியாமை. இனிமேலும் இவ்வாறிருத்தல் மடைமை; தெரிந்துகொண்டேன் இது என் கடமை” இவ்வாருகத் தன் கதையைப்பற்றித்தானே பூரிப்டன் சொல்லிக்கொண்டான் செல்வன்.

திங்கட்கிழமையான அன்று காலை பத்து மணிக்கு கதையைக் கவரில் அடைத்துக்கொண்டு அஞ்சல் நிலையத்தை நோக்கிச் சென்ருன். அங்கு முப்பத்தைந்து காசுகளுக்கு அஞ்சல் தலைகளை வாங்கி வரிசையாகக் கவரில் ஒட்டினுன். பின்னர் பெட்டியின் அருகில் சென்று நின்று

( 16-ம் பக்கம் பார்க்க )

# அல்ஜீரியாவும் திராவிடநாடும்

மலர் 20 ]   ஆண்டு சந்தா ரூ. 8   (20—5—62)   தனிப்பிரதி 16 காசு   [ இதழ்

1954-ம் ஆண்டு அல்ஜீரியாவில் அரசியல் எரிமலை குமுறி வெடிக்க ஆரம்பித்தது. நெடுநாட்களாகக் குமைந்துகொண்டிருந்த விடுதலை வேட்கை என்ற நெருப்பு வெள்ளம் பொங்கிப்புரண்டு தடை பல தகர்த்து எதிர்ப்பட்ட இடையூறுகளையெல்லாம் இடம் தெரியாமல் அழித்து ஆதிக்கவர்க்கத்தினரின் அடக்குமுறை என்ற கோட்டையை முற்றுகையிட ஆரம்பித்தது.

"சிலரைச் சிலநாட்கள் ஏமாற்றலாம், ஆனால் பலரைப் பல நாட்கள் ஏமாற்றமுடியாது" என்பதைப் போன்று ஓர் இனத்தைப் பல ஆண்டுகள் அடிமைப்படுத்தி ஆனந்தவாழ்வு நடத்தலாம்; ஆனால் காலமெல்லாம் அவர் தம் இரத்த வியர்வையில் தங்களின் இன்பபுரியை இடையூறு இல்லாமல் அமைத்துக் கொள்ள இயலாது என்பதனை உலகெங்கும் காலனி ஆதிக்கமுள்ள வல்லரசுகள் உணரத் தலைப்பட்டுவிட்டன என்பதைத்தான் அண்மைக் காலத்தில் விடுதலை பெற்ற கானா, காங்கோ, எகிப்து, மற்றும் பல ஆப்பிரிக்க நாடுகள் உணர்த்தின! அதனுடைய அடுத்த அத்தியாயம்தான் அல்ஜீரியக் கிளர்ச்சியாகும்! திராவிடத்திலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு நாட்டில் நடக்கும் வரலாற்றுப் புகழ் பெறத்தக்க புனிதப்போர் நிகழ்ச்சிகள் இன்றைய தினம் இங்குள்ள ஏக இந்தியாவின் தவப் புதல்வர்களுக்கு ஒரு சிறந்த படிப்பினையாக இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

உலகத்திலேயே முதிர்ந்த சர்வாதிகாரியும், சிறந்த இராணுவத் தளபதியுமான ஜெனரல் டிகாலே தன்னுடைய படைபலத்தையும், பண பலத்தையும் எந்த அளவிற்கு அல்ஜீரியர்களின் விடுதலை வேட்கைக்கு எதிராகப் பயன்படுத்த முடியுமோ, அந்த அளவிற்குப் பயன்படுத்திப் பார்த்துவிட்டார்! இளமைத் துடிப்பும், இன்பவாழ்க்கையில் ஈடு இணையற்ற பிடிப்பும்கொண்ட எண்ணற்ற அல்ஜீரிய இளைஞர்களின் வாழ்க்கையை முதல் அத்தியாயத்தோடு முடித்துவிட்ட பெருமை பிரெஞ்சு சர்வாதிகாரியையே சாரும். அந்த இளைஞர்கள் செய்த தவறு என்ன தெரியுமா? அவர்கள் தங்களுடைய நாடு விடுதலை பெறவேண்டும் என்று கூறியது தான். அல்ஜீரியாவில் அமைதி புதைகுழிக்குச் சென்று ஆண்டுகள் எட்டாயின! துப்பாக்கியின் வேட்டு முழக்கமும், தடியடிகளின் கடூரஒலியும், இராணுவவீரர்களின் மிதியடியின் ஒலியும் அல்ஜீரியாவின் எல்லாப் பகுதிகளிலும் நாள்தோறும் கேட்டவண்ணமாக இருந்தன! எவ்வளவு செலவானாலும் சரி, எத்தனை ஆண்டுகள் இந்த அடக்குமுறை அமுலில் இருந்தாலும் சரி, விடுதலை என்பது அல்ஜீரியர்களுக்கு கொடுக்கமுடியாது என்று வீரமுழக்கம் செய்த பிரெஞ்சுஏகாதிபத்தியம், பல இலட்சம் அல்ஜீரியர்களைப் பலி வாங்கியதற்குப் பிறகு, இலட்சக்கணக்கான பிரெஞ்சு வீரர்களை இழந்த பிறகு, இப்போது அல்ஜீரியாவிற்கு விடுதலை அளிக்க முன்வந் திருப்பதாகச் செய்திகள் அறிவிக்கின்றன; துப்பாக்கிகளையும் டாங்கிகளையும் வெடி மருந்துகளையும் நம்பி வாழ்ந்த சர்வாதிகாரிகள்கூட, இன்றைய தினம் தனிப்பட்ட இனத்தின் விடுதலைக் குரலுக்குச் செவிசாய்க்க முற்பட்டுள்ளனர் என்பதைத்தான் அல்ஜீரிய கிளர்ச்சி போன்ற பல எழுச்சிமிக்க புனிதப் போராட்டங்கள் உலகுக்கு உணர்த்துகின்றன!

ஆனால்......! அல்ஜீரியாவில் புரட்சியா? எகிப்தில் கலவரமா? ஈரானில் கிளர்ச்சியா? பாகிஸ்தானத்தில் சர்வாதிகாரமா? நேபாளத்தில் மன்னராட்சியா? ருசியாவில் ஆட்சி மாற்றமா? பர்மாவில் இராணுவக் கலகமா? சிரியா தனி அரசா? இன்னும் உலகத்தில் எந்தெந்தப் பகுதிகளில் எது நடந்தாலும் சரி, அங்கெல்லாம் நமது பெருமதிப்பிற்கு உரியவரும் காந்தியடிகளின் முதல் சீடரும் பச்சைத் தமிழரின் ஆட்சிக்காவலருமான பண்டித நேரு அவர்களின் தங்கம்நிகர் கருத்துக்களும் பஞ்சசீல உபதேசங்களும், வரலாற்றுப் புகழ் மிக்க வன்மை வாய்ந்த சொற்பொழிவுகளும் ஒலிக்காமல் இருப்பதே இல்லை! அத்தகைய அகில உலகப் புகழ்பெற்ற தலைவரின் ஆளுகைக்கு உட்பட்ட இந்தியத் துணைக்கண்டத்திலோ எங்கு பார்த்தாலும் இன எழுச்சிகளும், பிரிவினை வாதங்களும் எழும்பியவண்ணமே உள்ளன! "பஞ்சாப் பஞ்சாபியருக்கே", "நாகமலை நாகர்களுக்கே", "திராவிடம் திராவிடருக்கே" என்ற முழக்கங்கள் பண்டிதரின் சினத்தை எழுப்பும் வகையில் முழங்கப்படுகின்றன! இந்த முழக்கங்களை எல்லாம் நேரு பண்டிதர் வெறும் ஓலங்கள் என்றுவேண்டுமானால்

எண்ணி அமைதி அடையட்டும்! அல்லது அவருடைய கருத்துப்படி காட்டுமிராண்டிகளின் கூச்சலாக வேண்டுமானுலும் இருந்துவிட்டுப்போகட்டும். ஆனுல் இப்படியெல்லாம் எண்ணி மக்களின் இதயத்து எழுச்சியை புறக்கணிப்பதைவிடப் பண்டித் நேரு அவர்கள் சில தினங்களுக்கு முன்பு பாராளுமன்றத்தில் "யுத்தமே வந்தாலும்சரி, பிரிவினையை ஏற்றுக்கொள்ள முடியாது" என்று முழங்கித் தென்னகத்து மக்களின் எண்ண எழுச்சிகளையும் அவர்தம் ஆதரவு பெற்ற தலைவர்களின் மூலாதாரக் கொள்கையான பிரிவினைக் கருத்தையும் ஜனநாயகத்திற்கு எதிரான வழிகளில் புறக்கணித்து அலட்சியப்படுத்தியுள்ளார்! அவரது சீற்றத்தைக் கண்டு நாம் வியப்போ திகைப்போ அடையவில்லை! ஆனுல் அகில உலகப் பிரச்சினைகளுக்கு அமைதியான முறையில் தீர்வு காணும் பெரிய இடத்து சிந்தனைத் திறன் இந்த அளவிற்குப் பிற்போக்குத்தனமான சர்வாதிகாரச் சாயல் படிந்த கருத்தைப் படைத்துவிட்டதே என்று நல்லறிவாளர்களும் ஜனநாயகப் பற்றுடையாரும் ஆழ்ந்துசிந்திக்கத் துவங்கிவிட்டனர்! "யுத்தம் வந்தாலும் சரி" என்று ஒரு பெரிய தலைவர் கூறும் அளவிற்குத் தென்னகத்து மக்களோ அவர்களின் தலைவர்களோ என்ன தவறு செய்துவிட்டனர்? அமெரிக்காவில் நீக்ரோ இன எதிர்ப்பு ஒழிப்பிற்கு அரசினருக்கு எதிராக ஆயுதம் தாங்கிய அமெரிக்கர்களைப்போன்று தென்னகத்தார் இந்திய அரசின் சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகளுக்கு முட்டுக்கட்டை இட்டனரா? அல்லது காட்டுமிராண்டிகளைப்போன்று மறைவிடங்களில் பதுங்கிக் கொரில்லா முறையைப் பின்பற்றி சிட்டுக்குருவிகளைச் சுட்டுக் கொல்லுவதுபோன்று இராணுவத்தினரைத் திராவிடத்து மக்கள் சுட்டுக் கொன்றுர்களா? இங்கேயும் ஒரு நவகாளியைத் தோற்றுவித்தார்களா? என்ன நடந்துவிட்டது? எதற்காக இந்த மிரட்டல்? "சிரியா எகிப்துடன் இணைந்து வாழவிரும்பவில்லை, அது சுதந்திரமாக வாழ விழைகிறது" என்று சிரியர்கள் முழங்கியபோதுகூடஇராணுவத் தளபதி ஜெனரல் நாசர் நேரு அவர்களைப் போன்று கூறவில்லையே? எந்தவித முயற்சியும் சிரியர்களை மீண்டும் இணைக்காது என்று அறிந்தவுடன் தனி ஆட்சி செய்யச் சிரியர்களுக்கு அனுமதி அளித்துவிட்டாரே?இது எதைக் காட்டுகிறது? ஒரே இன அடிப்படையில் வாழும் எகிப்து, சிரியா, ஆகிய இரண்டு நாடுகளும் ஒன்ருக இருக்க விழையாதபோது, கலாசார அரசியல் சமுதாயத்துறைகளின் இரு வேறு துருவங்களாகத் திகழும் வடக்கும் தெற்கும் எப்படி ஒன்ருக இணைந்து வாழ முடியும்? இதைக் காட்டி "எங்கள் நாட்டை எங்களிடம் கொடு" என்ருல் "உள்நாட்டு யுத்தம் வந்தாலும் இதற்கு உடன்பட மாட்டேன்" என்று கூறுவது சரியான பதிலாகுமா? இதற்குத்தான் ஜனநாயகம் என்று பெயரா? இப்படிப் பேசுவதுதான் பஞ்சசீலப் பண்டிதரின் பண்பா?

உலகத்தின் எந்தச் சர்வாதிகாரியையும் தோற்கடிக்கும் வகையில் ஒரு ஜனநாயக நாட்டின் பேரமைச்சர் பேசுவது எத்தகைய தீய விளைவுகளை உண்டாக்கும் என்பதை அரசியல் உணர்ந்தவர்களால்தான் புரிந்து கொள்ள முடியும்! இதே கருத்தை இதற்கு முன்பு முழங்கியவர்களில் பலர் இன்று அதிகாரத்தில் இல்லை, இருக்கும் ஒரு சிலர் தங்களின் கருத்துக்களை விரைந்து மாற்றிக் கொண்டு வருகின்றனர்! ஆனுல் அகில உலகத்திலும் ஜனநாயக விற்பனையின் மொத்த வியாபாரியான நேரு அவர்கள் "பிரிவினை வேண்டுமென்ருல், உள்நாட்டு யுத்தம் வந்தே தீரும்" என்கிருர். இதை வெறும் ஆவேசப் பேச்சு என்று மக்கள் ஒதுக்கிவிடாமல் அரசியல் வல்லுநர் ஒருவரின் இதயத் துடிப்பின் பிரதிபலிப்புத்தான் இந்தப் பேச்சு என்பதை உணர்ந்து ஜனநாயகத்தைக் காப்பாற்ற ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். அல்ஜீரியாவில் குவிந்த பிண மலைகள்—காங்கோவில் ஓடிய இரத்த வெள்ளம் — பர்மாவில் ஏற்பட்ட இராணுவ ஆட்சி ஆகிய இன்னபிற விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் திராவிடத்திலும் ஏற்படக்கூடாது என்ற குறிக்கோளோடு அறவழி நின்று உரிமை கோரும் திராவிடத்தில் தீ பரவவிடுவது விரும்பத் தக்கதோ வேண்டப்படுவதோ அல்ல என்பதை நினைவுறுத்துகிருேம்.

வழக்கறிஞர் தில்லை-வில்லாளன்,
எம். ஏ., பி. எல்.
வழங்கும்

இலக்கிய விருந்துகள்

பட்டமரம் — 1 - 50
திரை — 1 - 00
காதல் சக்கரம் (அச்சில்)
ஆரியர் யார்? திராவிடர் யார்? (அச்சில்)
மழலைச் செல்வம் (அச்சில்)

விபரங்கட்கு:-

தம்பி வெளியீடுகள்

72/73, கடைத் தெரு, :: சிதம்பரம்.

# ஆயிரங்காலப் பயிர்

– திலீபன் –

"சென்ற மாதம் தண்மையான ஒளிக் கற்றைகளை வீசிய நில விற்கு இன்றென்ன வந்துவிட்டது?''

சாந்தா தனக்குள் அக்கேள்வி யைக் கேட்டுக்கொண்டாள்.

"பேதைப் பெண்ணே! எனக் கேதும் மாற்றமில்லை. உனக்குத் தான் மாற்றம், கவலையெல்லாம்''

நிலவு கூறவில்லை!

சாந்தாவின் இன்னொரு மனம் அவளுக்கு விடை அளித்தது.

நகைமுத்தை உதிரவிட்டபடி நீல வானத்தை மறுமுறை நோட்டம் விட்டாள் சாந்தா.

"விண்மீன்களுக்குச் சிரிக்க யாரடி கற்றுக்கொடுத்தது......?''

இனம் தெரியாத இன்ப உணர் வலைகள் அவளுடைய உள்ளத்தில் மோதி எழும்பியவாறிருந்தன.

"கோமளம், உனக்குத் தெரியுமாடி சங்கதி, இப்ப நம்மோட சாந்தா வர்றதுபோல அடுத்த மாதம் வர மாட்டா...''

"என்னடி புதிர் போடறே? சாந்தா வேறே ஏதாவது ஊருக்குக் குடிப் போகப் போருளா?''

"நீ ஒரு மண்டு...ஸ்டேஷன்மாஸ் டர் பொண்ணுல்லே. உனக்கு ஊர் ஊரா டேராத் தூக்கற நினைவு மட் டும் போகாது...''

"உன்னைப் போலக் கிணத்துத் தவளையா இருக்கச் சொல்றீயா? உனக்கு இந்தக் காவேரி ஆறும், அந்த மாந்தோப்பும்தான் தெரியும்—பட்டணக் கரையெல்லாம் சுத்தி யிருந்தா, இன்னும் ரொம்பவாயிருக் கும்...''

"'சாந்தாவைப் பற்றிச் சொல்ல வந்த இரண்டு பேரும் ஏன்'டி சண்டை போட்டுக்கறீங்க...சுகுணு! சாந்தா ஏன்டி நம்மோட இனி வர மாட்டா?''

"சாந்தா இனி இந்தக்காவேரிக்கும், அந்த மாந்தோப்புக்கும் நம்ம வம்பு மடத்துக்கும் கும்பிடு போட்டுட்டு சம்சார சாகரத்திலே விழப்போருடி'' என்று கூறியவாறே வாரால்மீன் போலத் துள்ளிக் காவேரி நதியில் குதித்து நீந்த ஆரம்பித்தாள் சுகுணு. காவிரியின் சலசலப் போசையுடன் இளங் கன்னியர்களின் நகைப் பொலியும் கலந்து எதிரொலித்தது. மற்றப் பெண்களும் நீரில் குதித்து சுகுணுவிடம் சென்றனர்.

"சாந்தாவுக்குக் கல்யாணம் சீக்கி ரம் பண்ண முடிவு செய்திட்டாங் களே, அது ஏன் தெரியுமா...?''

மற்றப் பெண்கள் தெரியாதென்று தலையை அசைத்தனர்.

"மாப்பிள்ளையைப் பார்க்காம லேயே காதல் கொண்டுவிட்டா, மனேன்மணியைப் போல, சாந்தா. இராத்திரியிலே கனவு கண்டு ஏதோ உளறிக்கொட்டியிருக்கா. அவங்க அப்பா உடனே மாப்பிள்ளையைத் தேடிட்டாராம்''

குறும்புக்காரிகளின் வாய்க்கு நல்ல அவல் கிடைத்துவிட்டது. சாந்தாவின் முகத்தில் நாணம் செம் பஞ்சுக் குழம்பினைத் தீட்டியது. அவர் களின் கேலி மொழிகளைக் கேட்க அவள் உள்ளம் விரும்பிற்று; இருந் தாலும் பொய்க்கோபம் கொண்டு, தண்ணீரால் தன் தோழியர்களை அடித்து நின்ருள்.

"குறும்புக்காரிகள்!''

நினைவலைகள் மெள்ளத் தணிந் தன. "நேற்று அந்தக் குறும்புக்காரி கள் எப்படியெல்லாம் தன்னைக் கேலி செய்துவிட்டார்கள். அந்த இரட்டை வால் பின்னல்காரி சொன்ன சொல்...''

"சாந்தா சினிமா படத்திலே வர் ணிக்கிறதுபோல் உன் வீட்டுக்கார ராக வர்றவரும் "ஓரணு நாணயத் தின் விளிம்புபோல் வளைந்த கூந்த லும்''ன்னு வர்ணிச்சாராடி!''

சாந்தாவிற்கு உடல் சிலிர்த்தது.

சந்தனம்போல் மேனியழகும் ஏறு போன்ற பீடு நடையுமுள்ள ஓர் வாலிப உருவம் மனக் கண்ணில் நிழலாடிற்று.

வாழ்வில் பெறமுடியாத ஒரு பேற் றைப் பெற்றதாகவே நினைத்தாள், குடும்பக் காட்சிகளெல்லாம் மன மெனும் திரையில் தோன்றி மறைய ஆரம்பித்தன.

"அவரை எப்படி அழைப்பது...?''

"மாமா என்ரு...?''

"சே...அது கர்நாடகம்......அத் தான்......''

"அத்தான்!''

இரகசியமாக மெள்ள வாய்விட் டுச் சொல்லிக்கொண்டாள். இனம் தெரியாத வெட்கம் அவளைத் திடீ ரென்று கப்பிக்கொண்டது. சுற்று முற்றும்ஒருமுறை; யாராவது கேட்டு விட்டார்களோ என்று கவனித் தாள்.

எங்கும் எவருமில்லை.

வளைந்த நிலா வளர்ந்து வட்ட வடிவமாவதுபோல் அவள் உள்ளத் தில் பல நாட்களாகத் தேங்கிக் கிடந்த எண்ணங்களெல்லாம் முழு வடிவாகமாறிச் சாந்தாவைக் கற் பனை உலகிற்கு அழைத்துக்சென்று கொண்டிருந்தது.

"சாந்தா......''

என்ற தாயின் குரல், அவளை நினைவுலகிற் கொண்டுவந்துவிட் டது. மாடியைவிட்டுக் கீழே சென் ருள் சாந்தா.

○

பூ முடித்துப் பொட்டிட்டுப் புதுப் பெண்ணுனள்சாந்தா. வாத்தியங்கள் ஒலிக்கபெரியவர்கள்வாழ்த்த'மங்கல நாண்' அவள் மஞ்சள் நிறக் கழுத்தை வளைத்து மகிழ்ந்தது.

சாந்தா, சாந்தா—பழனியப்பனாக மாறிவிட்டாள்.

கயல் விழிகள் சந்தர்ப்பம் கிடைத்தபோது 'அவரை'க் கண்டு களித்தன.

அழகு ததும்பும் எழிலார்ந்தமுகம் அவள் மனேரதத்தில் சாரதியாக விளங்கியது.

"சாந்தா கொடுத்துவைத்தவள் தான்!''

தோழியர் கூட்டம் தமக்குள்ளாக முணுமுணுத்துக்கொண்டது.

முதல் நாள்.........

கிராமத்திலிருந்த நங்கைகளில் முழுப்பகுதியும் சாந்தாவின் தலையில்

இடம்பிடித்துக் கொண்டதுபோல் இருந்தன. மல்லிகை மலரின் மணம் 'குப்'பென்று எங்கும் கமழ்ந்தவாறிருந்தது. "தலைச் சுமையுடன் தன் இதயத்திலும் சுமையா?"

ஏதோ ஓர் அச்ச உணர்வு—சாந்தாவின் நெஞ்சு படபடத்தது. வியர்வை அவளை நனைத்தது.

சாந்தாவின் கைகளில் பழத் தட்டையும் பால் கோப்பையையும் கொடுத்து அறையினுள் தள்ளி விட்டனர்.

எங்கும் அமைதி...

ஏதோ, ஓர் கனவுலகில் நடப்பது போன்ற ஓர் பிரமை.

அச்சடித்த பதுமையெனச் சற்று நேரம் அசையாது கதவருகே நின்று விட்டாள் சாந்தா. அவளுடைய கயல்விழிகளில் நீர் சூழ்ந்திருந்தது.

"சாந்தா!"

கணவனின் அழைப்பு—அவள் உள்ளம் சிலிர்த்தது. கண்கள் அறையை ஒருமுறை நோட்டம் விட்டன.

"மஞ்சத்தில் மலர்க்கொடிகள் எவ்வாறு வந்துபடர்ந்தன? அது கொடியல்ல — மலர்களைத் தொடுத்துக் கட்டிலில் சுற்றிவிட்டிருந்தனர். நிலவொளியும், மின்விளக்கொளியும் அறையில் ஒளிபாய்ச்சிக் கொண்டிருந்தன.

பழனியப்பன் சன்னலில் சாய்ந்த படியே தன் மனைவியைக் கண்டு கொண்டிருந்தான். அவனுடைய இதழ்க்கடையோரத்தில் புன்னகை நெளிந்துகொண்டிருந்தது.

ஓவியன் வரைந்திட்ட வண்ண ஓவியப் பதுமையென, மானின் மருட்சியுடைய விழிகள் படைத்த இவள்—தன் மனைவிதானா...?"

"பழனி நீ கொடுத்துவைத்தவன் தான்"

சாந்தாவிற்கு மயக்கநிலை தெளிந்து பார்த்தபோது, தன் கணவன் தன்னையே இதுவரையிலும் பார்த்தவாறிருப்பது கண்டு நாணம் பிறந்தது. நிலவின் தன்மைக் கதிர்கள் தன் உடலில் படுமாறு நின்ற பழனி, சன்னலைவிட்டுச் சாந்தாவின் பக்கம்வந்தான்.

"சாந்தா......"

கணவனின் கால்களைத் தொட்டு வணங்கினாள் சாந்தா.

"என்ன இது...பாட்டிகாலத்துப் பெண்போல்"

சாந்தாவின் மலர்க்கரங்கள் பழனியின் கரங்களில் புதைந்தன.

"சாந்தா...!"

"அத்...தான்"

அந்தச் சொல் வெளியேற என்ன தவி தவித்தது. பழனியின் மார்பினின் மலர்க்கொடியனஅவள் சாய்ந்தாள். உள்ளங்களில் படபடப்பு அடங்கவில்லை. சாந்தாவின் கண்களை இமைகள் மூடின. கனவுலகில் சாய்ந்தாள்.

"அதோ நீல வான வெளி..."

வண்ணமலர்ச் சோலை—எண்ணத்தில் மலர்ந்த காதற் கொழுநன். அவன் கைத்தலம்பற்றிச் சாந்தா பீடுநடை போடுகிறாள்...... முத்துச் சிரிப்பழகும், அன்ன நடையும் கொண்ட அவள் தன் கணவனுடன் ஆடி மகிழ்கின்றாள். ஆடி நடந்திடக் காவிரியா, பொங்கு புதுப்புனல் கொண்ட கங்கையா இஃது என்ன ஆறு. அன்னப்படகொன்று அதில் வண்ணப் புருக்களென ஊர்ந்து சென்றனர், கீதமிசைத்தவாறு. நிலவுக்கள்ளன் கருமேகத் திரையினூடே மறைந்துசெல்கின்றான். திடீரென்று படகு ஆடுவானேன்...?

சாந்தாவின் இமைகள் மலர்ந்தன மலரிதழ்களைப்போல். கனவுலகு மறைந்தது.

என்ன இது...?

பழனியப்பன் உடல் அப்படி ஆடுவானேன்? வனப்பா?

சாந்தாவின் அடித்தொண்டையிலிருந்து 'வீல்' என்ற ஓசை பிறந்தது. சாந்தா மயக்கமுற்று மஞ்சத்தில் சாய்ந்தாள்.

பழனியும் வலிப்பினால் அவதியுற்று கீழே விழுந்தான்.

O

மறுநாள்...

செங்கதிரோன் தன் சிவந்த கிரணங்களைத் தீட்டியவாறு கீழ்வான முகட்டிலிருந்து ஏறிக்கொண்டிருந்தான். இலைகளைத் தழுவி மகிழ்ந்த பனித்துளிகள் மறைந்தவாறிருந்தன. பறவைகள் கூடுகளைவிட்டு இரைச்சலிட்டவாறு பறந்தன.

காலை நடவடிக்கைகளினால் சாந்தாவின் உறக்கத்தினைக் கலைக்க முடியவில்லை. விழிகளிலே நீர் சொட்டத் தன் மகளின் பக்கத்திலே உட்கார்ந்திருந்தார் சாமியப்பன்-சாந்தாவின் தந்தை. முந்தின இரவு நடந்த சம்பவம் அவரது வயிற்றில் நெருப்பையல்லவா வாரி இறைத்து விட்டது.

"நல்ல செல்வாக்குள்ள இடம்—பையனும் இராசாவாட்டமிருக்கிறான் –உங்களுக்கேற்ற இடம்" இப்படிச் சொல்லி ஏமாற்றி என் தங்கத்தை ஒரு வலிப்புக்காரனுக்கல்லவா தரச் செய்துவிட்டான் தரகன் — பாவி! உனக்கென்னடா தீங்கு செய்தேன் —உன் குடும்பம் உருப்படுமா? கிளியை வளர்த்து நானே அதன் தலையில் நெருப்பைக் கொட்டிவிட்டேனே..."

பெற்ற இதயம் குமுறிற்று. விம்மினார்.

"மகளே! உனக்கு இழைத்த தீங்கிற்கு இயற்கை தண்டனை தந்து விடும்..."

சிறுபிள்ளையைப்போல் அவர் அழுதார். அவர் வடித்த கண்ணீர் சாந்தாவின் பட்டு ரோசாக் கன்னத்தில் பட்டுத் தெறித்தது.

"என்ன'ங்க புள்ளே... சின்னப் பிள்ளே போல...... நடந்தது நடந்திடுச்சி; இனி வருத்தப்பட்டு என்ன பயன். அதனதன் தலையெழுத்து, நாம் என்ன செய்யறது..."

"குணசேகரம்!... என் மகளை நானே பாழும் கிணத்திலே தள்ளிட்டேன்! நான் நல்லகதிக்குப் போவேனா...?"

வெள்ளை ரோசாவைப்போல் சாந்தாவின் எழில்முகம் வெளிறிப்போயிருந்தது. சாந்தா கண்களைத் திறந்தாள்.

"அப்பா..."

சாமியப்பன் முகத்தைத் துடைத்துக்கொண்டார்.

"என்னம்மா சாந்தா உன் உடம்பு எப்படியம்மா இருக்கு?"

அவள் சிரித்தாள். அந்த நகைப்பினிலே முன்பிருந்த உயிர் இல்லை. உயிர் எப்படியிருக்கும்?

'ஆயிரங்காலத்துப் பயிர் — அவசரப்படக்கூடாது'என்பார்கள், திருமணம் செய்வதற்கு. ஆணானாலும் பெண்ணானாலும் சரி எவரும் தமக்கு வரும் மனைவியும், கணவரும் வியாதியற்று இருக்கவேண்டும் என்று தான் நினைப்பார்கள். ஆனால் சமுதாயத்தில் இக்குறைபாடு எவ்வாறு குறையும்? வியாதியுள்ளவர்கள் தங்கள் உணர்ச்சிகளை அடக்கி—தியாகம் செய்து பிறரை வாழ்விக்க அல்

லவா முயற்சிக்க வேண்டும். அப்படி நினைத்தால்தானே சமுதாயம் சீர்பெற்று நோயற்ற வாழ்வுள்ளவர்களைப் பெற்றுப் பெருமைப்படும்...! வலிப்புள்ளவர்களும், வேறு நோய் உள்ளவர்களும் தம் உணர்ச்சி ஒன்றிற்காக, ஒரு பெண்ணின் வாழ்வின் — அவர்தம் எண்ணக் கோட்டைகளை இடித்துத் தூளாக்கி வாழ்கின்றனர். அப்படியிருக்கும் வரையிலும் இந்த உலகினில் ஆயிரமாயிரம் சாந்தாக்கள் 'தரகர்' களால் மணமுடிக்கப்பெற்று அழிந்துகொண்டுதானிருப்பர்.

"சாந்தாவிற்கு உடலில் ஒரு நோயுமில்லை. திடீரென்று ஏற்பட்ட மன அதிர்ச்சி பூரண ஓய்வு தேவை" என்று மருத்துவர் கூறிவிட்டார். சாந்தாவினுல் அழவும் முடியவில்லை, சிரிக்கவும் முடியவில்லை. உள்ளம் வெற்றிடமாக மாறிவிட்டது.

O

"அப்பா'''

"என்னம்மா சாந்தா..."

"இன்னும் எத்தனை நாளைக்குத்தான் என்னை இப்படி வைச்சுக்கிட்டிருப்பீங்க..."

சாமியப்பன் திடுக்கிட்டு நிமிர்ந்து தன் மகளை நோக்கினர்- எதிரிலே வருவதற்குக்கூடப் பயந்தவளாபேசுகிருள்?

"என்னம்மா சொல்றே..."

"அப்பா! நடந்துபோனது திரும்பவும் மாறிடுமா? என் நிலை அப்படி அமைஞ்சி போயிடுச்சு. என்னைப் பற்றி நீங்க விசனப்பட்டு என்ன பயன்......?"

உன்னைப் பாழுங்கிணத்திலே தள்ளிவிட்டது விதியில்லேம்மா. என் மதிகுறைஞ்சு போனதால்தான், கல்யாணம்என்கிறதுஆயிரம் காலப் பயிருன்னு பெரியவங்க சொன்னதனேட உண்மையை நான் புரிஞ்சிக்கலே. தீர விசாரிக்காமல் உன்னைக் காக்காவலிப்புக்காரனுக்குத் தள்ளிவிட்டேன்.

"அப்பா! இங்கே உங்க மனசு என்னைப் பார்க்கறபோது என் வாழ்க்கையை வீணுக்கிட்டோமேன்னு கலங்குது — தொட்டுத் தாலிகட்டிய மனைவிகூட, நம் வியாதியைக் கண்டு ஓடிவிட்டாளேங்கற ஏக்கம் அவருக்கு. இந்த இரண்டுக் கிடையிலேயும், என்னை ஊரார் வாழாவெட்டின்னு செல்லமாகக் கூப்பிட்றதை என் மனசு எத்தனை நாளைக்குத்தானப்பா தாங்கும்?"

"சாந்தா"

அவள் தனது தந்தையின் கரங்களிலே முகத்தைப் புதைத்தவாறு அழுதாள்-

தாயற்ற அவளைச் சாமியப்பன் சிறுவயதில்கூட அழவைத்தது கிடையாதே. 'தாயினும் சாலப் பரிந்தூட்டி'யல்லவா தனது கண்களை இமை காப்பதுபோல் காத்து வளர்த்தார்.

தன் கணவன் வலிப்புக்காரனுக இருந்தும் அவன்கூட வாழ்வதற்குத் தன் மகள் துடிக்கும் துடிப்பு......? பெண் உள்ளம், அதில் தாய்மையும், இறைமையுமல்லவா உறைகின்றது.........! கண்களிலே நீர் துளிர்த்தது.

"அம்மா! நான் ரொம்பவும் கொடுமைக்காரன். ஆராயாது எதையும் நடத்திவிட்டுப் பின்னுல் வருந்துகிறேன். சாந்தா உன் புக்ககத்திலே உன்னை எவ்வாறு கொண்டுபோய்விடுவேன் அம்மா. அன்று அவ்வளவு ஆத்திரமாகப் பேசிவிட்டேனே, அவங்களை......"

"அப்பா! அத்தான் வியாதி உள்ளவரானுலும், குணத்திலே தங்கமப்பா......அவரோட உள்ளம் தெரியாம நான்கூட என் கடமையை மறந்திட்டேனப்பா."

"சாந்தா உன் கணவர் உனக்கு.. ......"

"ஆமாம்பா......"

கையிலுள்ள கடிதத்தைத் தன் தந்தையிடம் கொடுத்தாள். சாமியப்பன் கடிதத்தைப்பிரித்துப் படிக்கலானர்:

**அன்புள்ள சாந்தா!**

அப்படி அழைப்பதில் உனக்கு மனவருத்தமாகஇருந்தால் என்னை மன்னித்துவிடு. எனக்கு இன்னமும் உரிமையும், உன்னிடத்தில் அன்புமிருக்கின்ற காரணத்தினுலேயே அவ்வாறு அழைக்கின்றேன். என்னென்ன மனக்கோட்டைகள் கட்டி நீ மகிழ்ந்தாயோ... பாவி என்னுல் அது தரைமட்டமாக இடிக்கப்பட்டுவிட்டது. சாந்தா! என்மீது தவறில்லை. என்னுடைய நிலைமையை உணர்ந்ததால் நான் திருமணமே வேண்டாமென்றே மறுத்து வந்தேன். என் வீட்டிலுள்ளவர்என் வியாதியைக் காட்டி — அது வியாதியல்ல — கொடிய சாபம்... என்னைப் புண்படுத்திப் பேசினர். எத்தனை நாளைக்குஎன்னை வைத்து மாரடிப்பது என்று! பாவம் உன் தலையில் என்னைச் சுமத்திவிட்டார்கள்.

சாந்தா! அன்றிரவு அதுதான் முதலிரவில் நான் உன்னிடம் என் மனதைவிட்டுப் பேசவேண்டும், உன் மலர்க் கரங்களில் என் முகத்தைப் புதைத்து அழவேண்டும். ஆண்கள் அழுவது தவறென்பாய்......சாந்தா! மனிதன் மகிழ்வு பிறக்கையில் வாய்விட்டுச் சிரித்து மகிழ்கின்றுன். துயரங்களைச் சுமந்து தவிக்கையில் அழுகைதானே சுமையைக் குறைக்கிறது. அது எப்படித் தவருகும்...? பிறந்தவுடன் நானும் உன்னைப்போலவே தாயின் அன்பினைக் கண்டறியாதவன். சிறிய தாயினுல் கொடுமைப் படுத்தப்பட்டு வந்தவன்...... உன் அருளொழுகும் விழிகளிலே ஏதோ ஓர் அன்பினைக் கண்டேன்.செவ்விதழ் நகைப்பினிலே என் துயர்களை மறந்திருந்தேன் அந்த ஒரு இரவிலே பாழும் வலிப்பு வந்தது. நாமும் பிரிந்தோம். என் உள்ளத்தை எவ்வாறு உனக்குக் காட்டமுடியும்? புறப்பட்டு ஊருக்கு வர நினைத்தேன். உன் தந்தையின் முகம் என் மனக்கண் முன்னுல் வந்தது. நான் பிறந்த காரணத்தினுல் எத்தனை நல்லவர்களுக்கும் இடையூறு. சாந்தா! நீயும் என்னை வெறுத்துவிட்டாய் என்ற பிறகு இந்த உலகமே எனக்கு வெட்டவெளியாகிவிட்டது. இனி நான் வாழ்ந்துதான் என்ன பயன்? ஒருபுறம் உற்ருர் உறவினர்கள் ஏச,கட்டிய மனைவியாகிய உன்னையும் பிரிந்து நோயுள்ள நான் ஆதரவற்று வாழத்தான் வேண்டுமா? என்னையே நான் கேட்டுக்கொள்கின்றேன். உன்னை மறுபடியும் காண்பேன், உன்னுடன் வாழ்வேன் என்ற நம்பிக்கை என்னுள் இன்னமுமிருக்கிறது. சாந்தா உன் மனநிலையை எவ்வாறு என்னுல் அறிய முடியும்?

இப்படிக்கு, வாழமுடியாத அப்பாவி,
பழனி.

சாமியப்பன் கண்கள் நீரை உகுத்தன.

"சாந்தா! இயற்கை நல்லவர்களை ஏன்தான் இப்படிக் கொடுமைபடுத்துதோ? உன்னுடைய ஆசையை நான் வீணுக்கலேம்மா. நடக்கறது நடக்கட்டும். உன்னை உன் கணவன் கையிலே ஒப்படைச்சிடறேனம்மா.

அவர் ஏன் அப்படி விம்மியழுகின்ருர், சிறு பிள்ளையைப்போல.

மனதில் ஏதோ இருள் படர்வதைப் போன்ற உணர்ச்சி. சாந்தா மாடிக்குச் சென்று வீதியை ஒருமுறை நோட்டம்விட்டாள்.

"காலையில் டவுனுக்குப் போன வரை இன்னமும் காணுேமே! தனியாகப் போகவேண்டாமென்ருலும் கேட்டால்தானே..."

என்று கலங்கிற்று அவள் உள்ளம். குடியானவர்கள் மாடுகளை ஓட்டியவாறு வீடுகளை நோக்கித் திரும்பியவாறிருந்தனர். பறவைகள் கூட தத்தம் கூடுகளுக்கு விரைந்து கொண்டிருந்தன.

கலக்கத்துடன் சாலையைக் கவனித்தாள் மீண்டும். தூரத்தில் எங்கேயோ ஒரு கார் செம்மண் படலத்தைத் தனக்குப் பின்னுல் கிளப்பியவாறு வந்துகொண்டிருந்தது.

இருளெனும் திரை மெள்ளப் படர்ந்தவாறிருந்தது. சாந்தா அடிவானத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

'பட்'

சாந்தா மாடியிலிருந்து குனிந்து பார்த்தாள். காரொன்று வாயிலில் வந்து நின்றது. அதிலிருந்து காக்கி உடை அணிந்த ஒருவர் இறங்கிஞர்.

"இது பழனி வீடுங்களா?"

"ஆமாமுங்க...இதேதான்"

தன் கணவரைத்தேடிப் போலீசா? சாந்தா மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தாள், மாடிப்படியை அடைவதற்குள் தன் கணவனை இருவர் சவமாகத் தூக்கி வருவதைக் கண்டாள்.

"ஐயோ...அத்தான்"

பேய்க் கூச்சல் என்பார்களே! அதுதானு...?

மறுநாள் பத்திரிகையிலே—
"பரிதாப மரணம்"

மேட்டூர் கிராமவாசி பழனி என்பவர் நகரத்திற்கு வந்து சாலையைக் கடக்க முனைந்தபோது, காக்காய் வலிப்பு வந்து ரோடில் விழுந்துவிட்டார். திடீரென்று சாமான்கள் ஏற்றி வந்த லாரி ஒன்று மோதி அந்த இடத்திலேயே அவர் மாண்டார்.

இனிமேல் சாந்தா வாழாவெட்டியல்ல!

விதவை!

*

# எல்லாம் எதற்காக?

[கனகு]

அந்தப் பெரிய மாளிகையின் மூலை முடுக்குகளிலெல்லாம் விலையுயர்ந்த பொருள்கள் விநோதமான பொருள்கள் இறைந்து கிடந்தன. எங்கணும் வேலைக்காரர்கள் நிறைந்து நின்ருர்கள். அந்த மாளிகையின் முகப்பு வருவோர் அமர்ந்து உரையாடுவதற்கு, களியாடுவதற்கு மகிழ்ச்சிக் கூத்துக்கள் நிகழ்த்துவதற்கென்றே அமைந்த மணி மண்டபம். அப்பப்ப, அதன் பெருமையை எப்படி விவரிப்பது! அதன் அருமையை என்னென்பது! பளிங்குக் கல்லாலான சுவர். சலவைக் கல் பதித்த தரை. அந்தச் சலவைக் கல் தரைமீது பட்டுக் கம்பளம். மேலே விதானமா அது! உலகத்து விநோதமெல்லாம் அங்கு சித்திர விசித்திரமாகத் தீட்டப்பட்டிருந்தன. அந்தச் சித்திர விசித்திரங்களைப் பார்த்துக்கொண்டே ஊனின்றி, உறக்கமின்றி எவ்வளவு நாட்கள் வேண்டுமானுலும் போக்கிவிடலாம். அடடா, அந்த விசித்திர சித்திரங்களைப் பார்ப்பதற்கு அமைந்திருக்கின்றதே முறை, அந்த முறையொன்றையே இன்றைக்கெல்லாம் புகழ்ந்துகொண்டிருந்தாலும் போதாது. சுற்றிலுமிருக்கும் பளிங்குச் சுவர்மீது மேலேயுள்ள சித்திரங்கள் ஒவ்வொன்றும் பெரிதாக, எடுப்பாக விழுந்துகொண்டேயிருக்கும். சுவரின் எந்த இடத்திலும், மேலே எந்தப் பக்கமிருக்கும் சித்திரமும் வந்து விழுமாறு அமைந்துள்ளன ஆங்குள்ள கண்ணுடிகள். எழுந்து நிற்க வேண்டுவதில்லை. அண்ணுந்து பார்க்க வேண்டுவதில்லை. உட்கார்ந்தது உட்கார்ந்த வண்ணமே அவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கலாம்.

அந்தமண்டபத்து நுழைவாயிலில் ஒருபுறம் அழகானதொரு கூண்டு—கிளிக் கூண்டு. அந்தக் கூண்டின் ஒவ்வொரு கம்பியும் பளபளக்கும் செம்பொற் கம்பி. அந்தக் கூண்டின் ஒவ்வொரு பாகமும் கலையுணர்வோடு அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் கூண்டுக்குள் அழகானதொரு பஞ்சவர்ணக்கிளி. அந்தக் கூண்டைப் பார்த்துக்கொள்வதற்கு ஒரு பணியாள். அதற்குள்ளிருக்கும் அந்தப் பஞ்சவர்ணக் கிளியின் தேவைகளைக் கவனித்துக் கொள்வதற்கு ஒரு பணியாள். அந்த நுழைவாயிலின் மற்ருெருபுறம் பெரியதொரு கண்ணுடிச் சீசா. அந்தக் கண்ணுடிச் சீசாவிற்குள் தூய தண்புனலுக்குள்ளே அழகிய பொன் மீன்களிரண்டு. அங்கும் பணியாட்கள்—அந்தச் சீசாவைப் பார்த்துக் கொண்டிருப்பதற்கு, அங்குத் துள்ளித் துள்ளிச் சுற்றிச் சுற்றி வரும் பொன் மீன்களைக் கவனித்துக் கொண்டிருப்பதற்கு.

அந்தப் பெரு மாளிகைக்குள் நுழையும் வாய்ப்பைப் பெரும் பேருக எண்ணிக்கொண்டு தினம் தினம் எத்தனையோ பேர் அதன் வாயில் எதிரில் வந்து கால்கடுக்க நின்றுவிட்டு, நின்றுவிட்டு, காத்துக் கிடந்துவிட்டு ஏமாற்றத்தோடு செல்கிருர்கள்! எப்படியோ அந்த மாளிகைக்குள் நுழையுமொரு வாய்ப்பினைப் பெற்றுவிட்டவர்கள் வாரக் கணக்கில், மாதக் கணக்கில் — அந்த மாளிகைக்குள் அவர்கள் நுழைந்துவிட்டு வந்தது பற்றியும், அங்கே அவர்கள் கண்டுவிட்டு வந்த அரிய காட்சிகள் பற்றியும் சளைக்காமல், வாய் ஓயாமல் சொல்லிக் கொண்டே, பேசிக்கொண்டேயிருக்கிருர்கள். அந்த மாளிகையில் சாமானியக் காவற்காரனுகவோ, ஏவலாளனுகவோ பணியாற்றுவதற்குஅன்ருடம் துடித்துக்கொண்டு முன்வரும், முயற்சிகள் புரியும் இளைஞரின் தொகைதான் சிறிதா? அங்கே பணியாற்றுவோருள் யாரேனும் ஒருவர் தமக்கு நண்பர் அல்லது அறிமுகமானுேர் என்று சொல்லிக் கொள்வதில் எத்தனை பேர் பெருமை பட்டுக்கொள்கிருர்கள் தெரியுமா?

அவ்வளவு பெருமையும், சிறப்பும், உயர்வும், புகழும் உடைய அந்த மாளிகைக்குள்தான் இப்போது அவள் உலவுகிருள். அந்த மாளிகை அவள் கட்டளைக்காகக் காத்து நிற்கிறது. அந்த மாளிகையின் தலைவன் அவள் காலடியில் வீழ்வதற்குச்

சித்தமாக இருக்கிறான். அவள் உரக்க மூச்சு விட்டாற்கூட 'ஏன், ஏன், ஏன்?' என்று கேட்கப் பணியாட்கள் அங்கு ஏராளம். ஆனால் யார் காதிலும் விழுமாறு அவள் மூச்சு விடுவதில்லை. அவள் மெல்ல வாயசைத்தால் போதும். கை கட்டி, வாய் புதைத்து, எதிரில் வந்து நிற்கப் பலர் அங்கே உளர். ஆனால், அவள் யார் கண்ணிலும் படுமாறு வாயசைப்பதில்லை. அவளைச் சுற்றிலும் பெரியதொரு பரிவாரம் அவளுக்குக் காவலாக, அவளுடைய ஏவலைக் கேட்பதற்காக நின்றுகொண்டேயிருக்கின்றது. அவளோ அந்தப் பரிவாரத்தை ஏறிட்டுப் பார்ப்பதுகூடக் கிடையாது. அவர்கள் அங்கு நிற்பதை அவள் பெருந்தொல்லையாக எண்ணினாள். அங்குள்ள கிளிக் கூண்டையும், பொன் மீன் அடைக்கப்பட்டுள்ள பெரிய சீசாவையும் அவள் ஓயாமல் ஒழியாமல் பார்த்துக்கொண்டேயிருந்தாள். அவற்றின் அருகே நின்றுகொண்டேயிருந்தாள். அங்கே அமர்ந்துகொண்டேயிருந்தாள் — கவலை தோய்ந்த நிலையினளாய்! "இந்த மாமணி மாளிகையில் இனி ஒரு கண நேரம்கூட என்னால் இருக்க முடியாது. நான் போய்விடவேண்டும்!" என்று அவள் மனம் ஓயாமல் ஒழியாமல் அடித்துக்கொண்டேயிருந்தது. ஏன்?

"அன்பே......!" என்றொரு குரல் கேட்டது.

அவள் பின்னால் பெரியதொரு பரிவாரத்தோடு அவள் அன்புக்குரியவன் வந்துகொண்டிருந்தான். அவள் மெல்லத் திரும்பிப் பார்த்தாள். அவள் முகத்தில் கடுமையேறியது. அவன்மீது எண்ணிறந்த கேள்விக் கணைகளை எடுத்தெடுத்துத் தொடுக்க வேண்டுமென்று உள்ளம் அடித்துக்கொண்டது. உதடு துடிதுடித்தது—அவளுக்கு.

"'அன்பே' என்று அழைக்காதீர்கள்! அடிமையே என்று கூறுங்கள்!"

வினாத் தொடுக்க நினைத்தவளின் வாயிலிருந்து கட்டளையாகச் சொற்கள் பிறந்தன.

அவன் ஒரு கணம் திகைத்தான்.

"நானல்லவா இப்போது உனக்கு அடிமையாக இருக்கிறேன். இந்த மாளிகையே உன் ஏவலுக்குக் காத்து நிற்கிறதே!"

அவளின் கடுமையை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லையோ, என்னவோ! அவன் குரல் கரகரத்து ஒலித்தது.

"ஆமாம், நீங்கள் என் அடிமை! இந்த மாளிகை என் ஏவலுக்குக் காத்து நிற்கிறது!" என்றாள் அவள் ஏளனச் சிரிப்போடு.

"பின்னே?"

புருவங்களை உயர்த்திக்கொண்டு அவன் வினவினான்.

"எல்லாம் வெறும் பேச்சு. என்னை நீங்கள் சிறை பிடித்துக்கொண்டு இந்தப் பெரிய கோட்டையில் அடைத்துவைத்திருக்கிறீர்கள். நான் எங்கே தெரியாமல் ஓடிவிடுவேனோ என்று சுற்றிலும் வேலி போட்டு வைத்திருக்கிறீர்கள். நான் தப்பிவிடுவதற்கு ஏதேனும் வழி பார்த்துவிடுவேனோ என்ற அச்சத்தால்தான் உங்களுடைய பெரிய பரிவாரத்தையே என் பின்னால் ஓயாமல், ஒழியாமல் கண்காணித்துக் கொண்டிருக்கும்படி ஏவிவிட்டிருக்கிறீர்கள்."

"சேச்சே! என்ன பேச்சு! சிறு பிள்ளையைப்போல் உளறுகிறாய்!—இந்த மாளிகையின் வேலி உனக்கு ஊறு ஒன்றும் நேராமல் பாதுகாப்பதற்காக. இங்குள்ள ஏவலர்கள் உன் கட்டளையை எதிர்பார்த்து,—அதைச் சிரமேற்கொண்டு பணியாற்றுவதற்காக."

"இல்லை, இல்லை. எல்லாம் வெறும் பேச்சேதான். முள் வேலிக்குப் பதிலாகப் பொன் வேலி போட்டிருக்கிறீர்கள். பொன்னாலானதோ, முள்ளாலானதோ வேலி வேலியேதான். அதிகாரமிடுக்குப் புரியும் காவலர்களுக்குப் பதிலாக அடங்கி, ஒடுங்கிப் போவோரைக் காவலாளிகளாகப் போட்டிருக்கிறீர்கள். அதிகார வெறியோடு மிரட்டினாலும், அடிமையைப்போல் குழைந்து பேசினாலும் காவலர்கள் காவலர்கள்தான்!"

"நீ என்ன கட்டளை போட்டாலும், அது இங்கே நிறைவேற்றப்படும். எது எப்படி நடக்கவேண்டுமென்று நீ எண்ணினாலும் அது அப்படியே நடக்கும்!"

"மெய்யாகவா?"

அவள் ஐயப்பாடும், கேலியும் கலக்க வினவுகிறாள்.

"ஆமாம், மெய்யேதான்!"

அவன் உறுதிப்பாட்டோடு மறுமொழி கூறுகிறான்.

"அப்படியானால் இங்கே வாருங்கள். உங்கள் பரிவாரங்கள் திரும்பிப் போகட்டும். நீங்கள் மட்டும் வாருங்கள்."

அவள் நடந்து கிளிக்கூண்டருகே செல்கிறாள். அவன் அவளைப் பின் தொடர்கிறான்.

"பார்த்தீர்களா இந்தக் கிளிக் கூண்டை!"

"இது உனக்காக உன் கட்டளைப்படி செய்துகொண்டு வரப்பட்டது தானே! இந்த அருமையான கூண்டைச் செய்துமுடிப்பதற்கே ஒருமாதமாயிற்றே! இதைச் செய்துமுடிக்கும் வேலையில் எத்தனை பேர் ஈடுபட்டிருந்தார்கள் தெரியுமா? அவர்கள் எங்கெந்த நாட்டிலிருந்து வந்தவர்கள் தெரியுமா? இதற்கான செலவு எவ்வளவு தெரியுமா?"

"தெரியும், தெரியும். எல்லாம் எதற்காக?"

"அதுதான் சொன்னேனே உனக்காக என்று!"

"இல்லை, இல்லை. இந்த அருமையான, அழகான பஞ்சவர்ணக் கிளியை இதற்குள்ளே போட்டு அடைப்பதற்காக!"

"ஆமாம், அதுகூட உனக்காகத்தான்!"

"இல்லை! கூண்டு கிளிக்காக. கிளியும், கூண்டும் இந்த மாளிகைக்காக. எல்லாம்..."

"எல்லாம் உனக்காக!"

"ஆமாம் எல்லாம் எனக்காக"

திரும்பவும் ஒரு ஏளனச் சிரிப்பு அவள் வாயிலிருந்து வெளிப்படுகிறது—"சரி, இப்படி வாருங்கள்!"

அவள் பொன் மீன் அடைக்கப்பட்டிருக்கும் அந்தப் பெரிய சீசாவின் அருகில் செல்கிறாள். அவனும் அவளைப் பின்தொடர்கிறான்.

"இதோ பார்த்தீர்களா இந்தப் பெரிய சீசாவை!"!

"இதுகூட உனக்காகத்தான் தனிக் கட்டளையின்மீது செய்யப்பட்டது; — வரவழைக்கப்பட்டது. இதையும் செய்துமுடிக்க ஒரு மாதத்திற்கு மேலாயிற்று. இதையும் செய்துமுடிக்க நுண்கலை நிபுணர்கள் பலர் தேவைப்பட்டார்கள் — வேறு வேறு நாடுகளிலிருந்து அவர்கள் வரவழைக்கப்பட்டார்கள்."

"அதற்குள் இருக்கின்றது பார்த்தீர்களா மீன்!"

"ஆமாம், பொன் மீன்! அது இந்த நாட்டில் கிடைக்கக்கூடியது அல்ல. தேடிய உடனே அகப்படக்கூடியதும் அல்ல. அதற்குக் கொடுத்த விலை அதிகம். அதைத் தேடிப்பிடிக்கச் செலவிட்ட நாள் அதிகம்."

"இவையெல்லாம் சேர்ந்து இந்த மாளிகையை அழகுபடுத்துவதற்கு ..."

"ஆமாம், இந்த மாளிகையை அழகுபடுத்தி, அதன்மூலம் உன்னைப் பெருமகிழ்ச்சியில் திளைக்கச் செய்வதற்கு. உனக்கு நல்ல பொழுதுபோக்கை ஏற்படுத்துவதற்கு."

"இந்த மாளிகையின் அழகையும் சிறப்பையும் பெருக்கி, இதிலே என்னையும் உலவவிட்டு, எல்லாவற்றையும் கொண்டு உங்களை நீங்கள் பெருமைப்படுத்திக் கொள்கிறீர்கள். உங்கள் செல்வச் செருக்கைக் காட்டிக் கொள்கிறீர்கள். உங்களின் ஆற்றலை உலகுக்கு எடுத்தோதி உங்களைப் புகழின் உச்சியில் வைத்துக்கொள்ள முனைந்து நிற்கிறீர்கள்!"

"சே, சே! புகழாவது, பெருமையாவது! அவையெல்லாம் எனக்கு வேண்டியமட்டும், தானே வந்து குவிந்துகிடக்கின்றன. இப்போது எனக்கு வேண்டுவதெல்லாம் உன்னுடைய மன நிறைவுதான்!"

"என்னுடைய மன நிறைவுதான் இப்போது உங்கள் குறிக்கோளா? அதற்கு இவ்வளவு நீங்கள் செய்ய வேண்டியதில்லையே! பேசாமல் என் விருப்பப்படி என்னைவிட்டுவிட்டாலே அந்த மன நிறைவை நான்தானே பெற்றுக்கொண்டுவிடுவேனே!— அதுபோகட்டும் என் மனநிறைவின் மீது உங்களுக்கேன் அவ்வளவு அக்கறை?"

"அக்கறை ஏன் என்று கேட்காதே! காரணம் என்னவென்று கேள். உனக்குத் தெரியும் அதுகூட. உன்மீது நான் அளவிலாப் பற்றுக்கொண்டிருக்கிறேன். என் உயிரோட்டமே உன்னிடத்தில் தானிருக்கின்றது. உன்மீது நான் கொண்டுள்ள பாசம் இத்தகையது, இவ்வளவினது என்று அறுதியிட்டுக் கூறமுடியாது."

"அதை என்னால் ஏனோ நம்ப முடியவில்லை. புகழ் நோக்கியும், பெருமையை நோக்கியும், செல்வச் செருக்கை நோக்கியும் நீங்கள் போட்டுவந்துள்ள ஏறுநடை உங்கள் சொற்களையெல்லாம் உபசாரச் சொற்களாகவே மாற்றிவிட்டிருக்கின்றன. உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து எழுகின்ற சொற்கள் எவை, வெறும் உபகாரச் சொற்கள் எவை என்று உங்களாலேயே கண்டு பிடித்துவிடமுடியாத அளவு நீங்கள் மயக்கத்தில் மூழ்கிக்கிடக்கிறீர்கள். நான் சொல்கிறேன், என் மீது நீங்கள் பற்றும், பாசமும் கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொள்வதுகூட உங்களை நீங்கள் பெருமைப்படுத்திக் கொள்வதற்குத் தான்."

"அப்படியானால் என் வாழ்க்கையே வெறும் உபசார வாழ்க்கையென்று சொல்கின்றாயா?"

"ஆமாம், உட்புறம் பெரிய துளையும், மேற்புறம் இலேசான வைரத் தன்மையும் கொண்ட மூங்கிலைப் போன்றது உங்கள்செயல், உங்கள் நடவடிக்கை மொத்தத்தில் உங்கள் வாழ்க்கை. மேலேயுள்ள வைரத் தன்மையைப் பார்த்துவிட்டு, உள்ளேயிருக்கும் துளையை மறந்து மூங்கில் முற்று முற்றும் வைரம் செறிந்தது என்று யாரேனும் சொல்வார்களா? அப்படித்தான் உங்களுடைய ஒவ்வொரு செயலும், ஒவ்வொரு சொல்லும். நீங்கள் பெருந்தன்மையாகப் பேசுவதுபோலவும், எதையும் பெருநோக்கோடு பார்ப்பதுபோலவும் வெளியில் தோன்றுகிறது. அப்படித் தோற்றம்காட்டி, அதன்மூலம் உங்கள் செல்வச் செருக்கை, உங்கள் பெருமையை வெளிப்படுத்திக் கொள்கிறீர்கள். உங்கள் புகழை உயர்த்திக்கொள்கிறீர்கள்."

"இவ்வளவு கீழாக என்னை எடைபோடுகின்றாயே நீ! சரி, இப்போது நான் என்ன செய்யவேண்டுமென்கிறாய்?"

"இதோ, வாருங்கள்!" அவள் கிளிக் கூண்டருகில் செல்கிறாள். "இதைத் திறவுங்கள்!" என்கிறாள்.

அவன் அதைத் திறக்கிறான்.

"இந்தக் கிளியை நீங்கள் எங்கிருந்து பிடித்துவரச் செய்தீர்களோ, அவ்விடத்திலேயே இதை விட்டுவிட்டு வரச்சொல்லுங்கள்!"

"இந்தக் கூண்டு?"

"கூண்டு!—அதை இந்தக் கிளியையும், கூண்டையும் காவல் காத்துவந்தவர்களுக்கே பரிசாகக் கொடுத்துவிடுங்கள்."

அவன் கிளியைப்பிடித்து, இருவரிடம் கொடுத்து, கொண்டுபோய் விட்டுவரப் பணிக்கிறான். கூண்டை அவள் சொன்னவாறே பரிசிலாகத் தந்துவிடுகிறான்.

அடுத்து, அவள் பொன்மீனிருக்கும் சீசாவைநெருங்குகிறாள். பொன்மீன் வெளியே எடுக்கப்படுகிறது. அதுவும் அனுப்பப்படுகிறது பிடித்து வந்த இடத்திலேயே திரும்பவும் விட்டுவிடவென்று.

"இப்போது என்ன செய்ய வேண்டும்?" அவன் வினவுகிறான்.

"என்னையும் விட்டுவிடுங்கள். எங்கு நான் முன்னே வாழ்ந்திருந்தேனோ, அங்கேயே செல்கிறேன்!"

"உன்னுடைய குப்பத்திற்கா? அந்தப் பழைய குடிசிலுக்கா?"

"ஆமாம்!"

அந்தக் குடிசில் அப்போதே சிதைந்து கிடந்ததே!"

"பரவாயில்லை. அதை நானே சென்று செப்பம் செய்துகொள்வேன்!"

"அது உன்னால் முடியுமா என்ன?"

"முடியும்!"

"அதற்குப் பணம் வேண்டாம்? மற்றவர்களின் துணை வேண்டாம்?"

"பணம் வேண்டாம்! மற்றவர்களின் துணை குப்பத்தில் ஏராளம் உண்டு."

அவள் தன் பட்டாடைகளை, அணிமணிகளையெல்லாம் களைந்து வைத்துவிட்டுக் குப்பத்திலிருக்கும் போதுஉடுத்திக்கொண்டிருந்த பழங் கந்தலைத் தரித்துக்கொள்ளுகிறாள். குப்பத்தை நோக்கி நடக்கிறாள்.

குப்பத்தில் அவளை எல்லாரும் சுற்றிச் சூழ்ந்துகொண்டு என்னென்னவோ கேட்கிறார்கள். எதற்கும் அவள் சரியாகப் பதில் சொல்லவில்லை. தன்னையறியாமல் அவள் செருக்கோடு மற்றவர்களைப் பார்க்கிறாள். தன்னையறியாமல் அவள் அதிகாரத்தோடு அவர்களுக்குக் கட்டளையிடுகிறாள், சிறிய தொரு குடிசில் தனக்காகக் கட்டித்தருமாறு அவள் கூறுகிறாள். அவளுடைய செருக்கு நிறைந்த பேச்சும், அதிகாரத் தோரணையும் மற்றவர்களை மனம் வருந்தச் செய்கிறது. அவள்மீது அவர்கள் வெறுப்புக் கொள்ளவும் தூண்டுகிறது. என்றாலும் அவள் கட்டளை நிறைவேற்றப்படுகிறது. சிறு பொழுதில் அவள் விரும்பியவாறு குடிசில் ஒன்று அவளுக்காகக் கட்டப்பட்டுவிடுகிறது.

அவள் அந்தக் குடிசிலில் குடியேறுகிறாள். அங்கே அவளுக்காக ஏவலாட்கள் யாருமில்லை. அங்கே அவள் வேலையை அவளேதான் செய்துகொள்ள வேண்டும். அதில் அவள் மகிழ்ச்சி கொள்கிறாள். நீண்ட நாள் சிறைவாசம் செய்துவிட்டு இப்போது வெளியில் வந்திருப்பவள் போல் உணர்கிறாள் அவள். நீண்ட நாட்கள் கைகளும், காலும் கட்டிப் போடப்பட்டுக் கிடந்த நிலையை மாற்றி இப்போது யாரோ அவற்றை

அவிழ்த்துவிட்டு விட்டதைப்போல் தோன்றுகிறது அவளுக்கு. அந்தக் குடிசிலில் செயற்கை மணம் இல்லை. செயற்கைக் காற்று இல்லை. அதைச் சுற்றிலும் செயற்கை வனப்புகள், செயற்கை அமைப்புக்கள் என்று எதுவுமே இல்லை. காண்பனவெல்லாம் இயற்கை. துய்ப்பனவெல்லாம் இயற்கை. அந்த இயற்கை நிலைகள் அவள் உள்ளத்தில் இன்பக் கிளுகிளுப்பை முன்புபோல் ஏற்படுத்த வந்தன. அவள் அன்றிரவு நன்றாக உறங்கினாள்.

மறுநாள் பொழுது புலர்ந்தது. குப்பத்து மக்கள் எல்லாம் வேலைக்குக் கிளம்பினார்கள். அவளும் அவர்களோடு போகக் கிளம்பினாள். "சீமானுக்கு வாழ்க்கைப்பட்டவள். எங்களோடு கூலி வேலைக்கு வரலாமா? வேண்டாம்! வேண்டாம்! ஊர் சிரிக்கும். நீ குடிசிலிலேயே இரு" என்று அவளுடைய உற்றாரும், சுற்றத்தாரும் அவளைத் தடுத்தார்கள்.

"ஊர் எதைத்தான் பார்த்துச் சிரிக்காமலிருக்கிறது! அதைப் பார்த்துக்கொண்டு அதற்காக அஞ்சிக்கொண்டு நான் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யாமல் விட்டுவிட முடியுமா? நானும் உங்களோடு உழைப்பதற்கு வந்துதான் தீருவேன்!" என்று அவள் பிடிவாதம் பிடிக்கிறாள்!

"நீ சிலநாள் மாளிகையிலிருந்து பழகியவள். மாளிகை வாசத்தை நுகர்ந்தவள். அங்கே சோம்பலாக உட்கார்ந்திருப்பதும், பிறருக்கு இன்னல் செய்யும், தொல்லை தரும் செயல்களில் ஈடுபட்டிருப்பதும்தான் பொழுது போக்கு — பிறருக்குத் தொல்லை தருவதையும், இன்னல் புரிவதையும் நீ விரும்பியிருக்கமாட்டாய்! ஆனால், சோம்பலாகவே காலத்தைக் கழித்திருப்பாய்! — நீ என்னவோ ஏற்கெனவே உழைத்துப் பழகியவள்தான். என்றாலும், எப்படியோ நீ சோம்பலுக்கு ஆட்பட்டுவிட்டாய்! இந்தச் சோம்பல் இருக்கிறதே இது ஒரு பெரு நோய், தொற்று நோய்! அது ஒரு தடவை தொற்றிக்கொண்டுவிட்டால் அதை விரட்டியோட்டுவது அத்துணை எளிதல்ல. இப்போது நீ எங்களோடு உழைக்கவேண்டுமென்றுதான் துடிதுடிக்கிறாய்! ஆனால் முன்புபோல் எங்களோடு நீ தொடர்ந்து உழைக்க முடியாது. சிறிது நேரத்தில் நீ சோர்வடைந்து விடுவாய்! மாளிகை வாசத்தின் நினைப்பு எப்படியாவது உள்ளத்தில் வந்து குந்திக்கொண்டு விடும். அதோடுகூட உன்னை வாழ்க்கைத் துணையாய் ஏற்றுக்கொண்டானே சீமான் — நீ எத்துணைதான் வெறுப்பை உருவாக்க முயன்றாலும் அந்தச் சீமானுடைய எண்ணம் உன் உள்ளத்தில் ஒட்டிக்கொண்டேதானிருக்கும். அது ஒட்டிக் கொண்டிருக்கும்வரை எங்களைப்போல் உன்னால் முழு மனத்தோடு உழைப்பில் ஈடுபட முடியாது. ஒருபுறம் உன்னுடைய துணைவனின் கௌரவத்தைப்பற்றி உன்னையறியாமலே நீ எண்ணத் தொடங்குவாய். பிறிதொருபுறம் சோம்பல்—பழக்க வாசனை காரணமாக—உன்னைக் குத்திக்கொண்டேயிருக்கும். அவையிரண்டையும் தள்ளிக்கொண்டும், [illegible]டிக் கொண்டும், விலகிக்கொண்டும்தான் நீ எங்களோடு உழைக்க வரவேண்டும்! அப்படி உழைக்கப் புகும் உன் உழைப்பு பயனில்லாத உழைப்பாகவே முடியும். வெற்றுழைப்பாகவே முடியும். அதன் மூலம் நீ பெற விரும்பும் மன நிறைவையும் பெறமுடியாது. மன அமைதியும் உண்டாகாது."

"அப்படியானால் நான் எதற்குமே ஏற்றவள் இல்லை என்ற நிலைக்கா இப்போது தள்ளப்பட்டிருக்கிறேன்!'

"ஆமாம், பாவம், என்ன செய்வது! உன் நிலை அதுவாகிவிட்டது!"

அந்த சொற்கள் அவளைக் கலக்கத்தில் ஆழ்த்திவிட்டன. 'ஐயோ, நான் எதற்கும் பயனில்லாதவளா' என்ற எண்ணம் அவள் உள்ளத்தை அரிக்கத் தொடங்கியது. மாளிகையில்தான் உபசாரம் என்ற தொல்லையால் நான் கட்டுப்பாட்டுக்கு உள்ளாக்கப்பட்டுக்கிடந்தேன். இங்கே அறிவுரை என்ற தொல்லை அதை விடப் பெரிதாக இருக்கின்றதே! நான் உழைக்க விழைந்தாலும் அதை இவர்கள் தடுப்பதற்கல்லவா சூழ்ந்துகொண்டு நிற்கிறார்கள். இதற்குமேல் என்ன செய்வேன்! என்று தவிப்பும் சோர்வும் கொண்டு அப்படியே குடிலுக்குள்போய் அமர்ந்துவிடுகிறாள் அவள். மற்றவர்கள் அவளைக் குடிசிலில் விட்டுவிட்டு உழைக்கப் போய்விடுகிறார்கள்.

மறுநாட் காலையில் அவள் எழுந்து உட்கார நினைக்கிறாள். முடியவில்லை, காய்ச்சல். அளவுக்கு மீறியகாய்ச்சல். குப்பத்திலுள்ள பச்சிலை மூலிகைகளும், பாட்டி மருத்துவமும் அவள் காய்ச்சலைப் போக்க, போய்விடுகின்றன. அவள் படுத்த படுக்கையாகவே கிடக்கின்றாள். ஏதேதோ பிதற்றிக்கொண்டே கிடக்கின்றாள். பெருமாளிகையின் தலைவன் ஆழ்ந்த யோசனையோடு அமர்ந்திருக்கிறான். பொன் மீன்களைக் கடலிற்கொண்டு போய் விட்டுவரச் சென்றவர்கள் அவன் எதிரில் வந்து நிற்கிறார்கள்.

"என்ன செய்தி?" என்று தலைவன் வினவுகிறான்.

"தாங்கள் சொன்னதுபோல் பொன் மீன்களைக் கடலிற்கொண்டு போய்விட்டோம்! அந்த மீன்களும் களிப்படைந்துவிட்டன போல்தான் தண்ணீருக்குள் துள்ளித் துள்ளித் திரியத் தொடங்கின. ஆனால், மற்ற மீன்கள்...அவற்றை அங்கே தன் போக்காக உலவவிடவில்லை. எல்லாம் ஒன்று சேர்ந்துகொண்டு இந்த இரண்டையும் தாக்கத் தொடங்கின."

"மற்றவையெல்லாம் பொன்மீன்கள் இல்லையோ? நான் கொண்டு போய்விடச் சொன்ன கடலில் அவற்றை நீங்கள்விடவில்லையோ?"

"நீங்கள் சொன்ன இடத்திலேயே தான் அந்த இரண்டையும் நாங்கள் கொண்டுபோய்விட்டோம். அங்கே கூட்டமாக இருந்த மீன்களில் பொன் மீன்களுந்தான் காணப்பட்டன."

"பின் ஏன் அவையெல்லாம் ஒன்று சேர்ந்துகொண்டு இந்த மீன்களைத் தாக்கத் தொடங்கின?"

"மற்றவை இந்த மீன்களை எப்படியோ அடையாளங் கண்டு கொண்டுவிட்டன. அதாவது, ஒருமுறை கடலிலிருந்து பிடிக்கப்பட்டு, நீண்டநாள் இயற்கையான நீர் நிலையியோ, நீரோட்டத்திலோ உலவாதவண்ணம் செயற்கையாக நிரப்பப்பட்ட சீசாவுக்குள் அடைக்கப்பட்டு செயற்கையுணவையும், செயற்கைக் காற்றையும் நுகர்ந்திருந்து செயற்கை வாழ்வு வாழ்ந்தனவல்ல அந்த மீன்கள்! அப்படி அவை உயிர் வாழ்ந்த செய்கை மற்ற மீன்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவையெல்லாம் ஒன்றாகக் கூடிக்கொண்டு இந்த இரண்டையும் தாக்கத் தொடங்கின.

"பிறகு?"

"பிறகு என்ன! நாங்கள் அந்த இரண்டு மீன்களையும் திரும்பப் பிடிக்க முயன்றோம். பிடிக்கவும்

பிடித்தோம். ஆனால் அவை இரண்டும் எங்கள் கைக்கு வந்து சேர்ந்த உடனேயே செத்துவிட்டன.''

"ஐயோ; என் வாழ்வெல்லாம் செயற்கை வாழ்வா! நீரில் வாழும் மீன்களுக்குக்கூட இந்த வாழ்வு பிடிக்கவில்லையா!'' என்று நெட்டுயிர்ப்புவிடுகிறான் அவன்.

சிறிது நேரத்தில், கிளியைக் கொண்டுபோய்க் காட்டில் விட்டு வரச் சென்றவர்கள் திரும்பினார்கள். அவர்கள் நல்ல செய்தி சொல்வார்கள் என்று அந்த மாளிகைத் தலைவன் எதிர்பார்த்தான். ஆனால், அவர்களோ பெருமூச்சு விட்டுக் கொண்டு பேசத் தொடங்கினார்கள்.

பாவம், அந்தக் கிளியைக் காட்டிற் கொண்டுபோய் விட்டதற்குப் பதிலாக இங்கேயே வைத்துக் கொண்டிருந்திருக்கலாம். இன்னும் சில நாள் அது உயிரோடு இருந்திருக்கும்''

"ஏன்?''

"அந்தக் கிளியைக் காட்டிலே கொண்டுபோய்விட்டதும், அது என்னவோ மகிழ்ச்சியடைந்து விட்டதுபோல்தான் தத்தித் தத்திப் பறக்கத் தொடங்கிற்று. ஆனால் சிறிது நேரத்திற்குள் அங்கே ஒரு பெரிய கிளிக்கூட்டமே வந்தது. அவையெல்லாம் இந்தக் கிளியைப் பார்த்ததும் கோபம் கொண்டுவிட்டனபோல் தோன்றின. எல்லாமாகச் சேர்ந்துகொண்டு இந்தக் கிளியைத் துரத்தத்தொடங்கின. சில கிளிகள் கொத்தவும் செய்தன.''

"அப்புறம்?''

"அப்புறம் என்ன?''

"மறுபடியும் அந்தக் கிளியை நாங்கள் பிடிக்கவேண்டியதாயிற்று. நாங்கள் அதைப்பிடித்துக்கொள்வதற்குள் அது குலையுயிருமாகி விட்டது! பாவம், காட்டிலிருந்து மனிதரால் பிடிக்கப்பட்டு, கூண்டிலே அடைக்கப்பட்டு செயற்கை வாழ்வுக் குட்படுத்தப்பட்ட பறவையை மற்றப் பறவைகள் திரும்பவும் தம் இனத்தோடு சேர்த்துக் கொள்வதில்லையாம். திரும்பி வந்த பறவையை எல்லாமாகச் சேர்ந்து கொண்டு கொத்திக்கொன்று தீர்த்துவிட்டுத்தான் மறுவேலை பார்க்குமாம்!''

"அட பாவமே, பறவைகளிடத்திலும், மீன்களிடத்திலும்கூட இந்த ஒறுக்கும் மனப்பான்மை உள்ளதா என்ன?''

"ஆமாம், அதற்குக் காரணம் மனிதன்தான். தன்னிச்சையாகத் தண்ணீரில் துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கும் மீனையும், காட்டிலே சுற்றிப் பறந்துகொண்டிருக்கும் பறவையையும் தன்னுடைய மகிழ்ச்சிக்காக மனிதன் சிறைப்படுத்துகிறான். அவற்றின் துன்ப வாதையில் இவன் இன்பத்தைக் காண விழைகிறான். அவனுடைய அந்தப் பொருளற்ற, பொருத்தமற்ற இன்ப விழைவு மற்ற உயிர்களின் கூற்றுக்கு முடிகிறது. மனிதன் திருந்தி அவன் சிறைபடுத்திய வற்றை விடுவித்து விட்டாலும் அவை தம்மால் வாழமுடியாத தன்மையைத்தான் பெறுகின்றன. ஒருதடவை வேண்டுமென்று செய்த தவறு மறுபடியும் திருத்த முடியாத பெருந்தவறாக முடிந்துவிடுகிறது.''

"மாளிகைத் தலைவனுக்கு மன உளைச்சல் பெருகிவிடுகிறது. அவன் சிந்திக்கும் திறனையும் இழந்து அப்படியே அமர்ந்துவிடுகிறான். அப்போது,

குப்பத்திலிருந்து இருவர் வருகின்றனர்.

மாளிகைத் தலைவன் திடுக்குற்று நிமிர்ந்து உட்காருகிறான்.

"உங்கள் அன்புக்குரியவள் சாகும் தறுவாயிலிருக்கிறாள்!'' என்று வந்தவர்கள் கூறுகின்றார்கள்.

"ஏன், என்ன நோய்?''

"நோய் ஒன்றும் புதிதில்லை. எல்லாம் மன நோய்தான். அவள் இங்கிருந்து குப்பத்துக்கு வந்ததும் அவள் நிலையை எங்களால் பார்த்துச் சகிக்க முடியவில்லை. அவளோ எங்களோடு வேலைசெய்ய வேண்டுமென்றாள். கடுமையாக உழைக்க விழைந்தாள். எங்களைப்போல் இயற்கை வாழ்வு வாழவேண்டுமென்றாள். அவள் நிலைகண்டு நாங்கள் பெரிதும் வருத்தத்தில் ஆழ்ந்தோம். திரும்பவும் அவள் உழைப்பதைப் பார்க்க நாங்கள் விரும்பவில்லை. கடைசியில் அவள் இப்படியும் ஒட்டாமல், அப்படியும் ஒட்டாமல் இரண்டுங்கெட்டான் நிலைக்கு உள்ளானாள். நாங்கள் அப்போதே எங்களோடு உழைப்பதற்கு அனுமதித்திருக்க வேண்டும். நாங்களும் தவறிவிட்டோம். அவளுடைய உள்ளமெல்லாம் இயற்கை வாழ்வில் படிந்து கிடக்கிறது. ஆனால் எப்படியோ—எப்படியோ என்ன—தபருமாளிகைக்குச் சொந்தக்காரராகி எல்லாவற்றிலும் செயற்கையையே பாராட்டிக்கொண்டிருக்கும் உங்களால் அவள் இந்தச் செயற்கை வாழ்விலும் ஈடுபாடு காட்டினாள்.

இப்போது எல்லாமாகச் சேர்ந்து கொண்டு அவள் உயிர்க்கிறுதி தேடிவிட்டன.

பெருமாளிகைக்குரியவன் தலையிலடித்துக்கொண்டு கதறுகிறான்.

"ஐயோ, என் செயற்கை வாழ்வு எத்தனை உயிர்களுக்குக் கூற்றாக முடிந்துவிட்டது. செயற்கை வாழ்வு மூலம் நான் மேட்டிமையைக் காட்ட விழைந்தேன். மேட்டிமைதான் வென்றதா? அதுவுமில்லை. நான் மனநிறைவைத்தான் கண்டேனா? இல்லவே இல்லை! எல்லாம் என்னோடு ஒழிந்துவிட்டிருக்கக்கூடாதா? எத்தனை உயிர்களை என்னையறியாமல் நான் பறித்துக்கொண்டுவிட்டேன். எத்தனை வாழ்க்கைகளை என்னையறியாமல் நான் கெடுத்துச் சீரழித்துவிட்டேன். ஐயோ, செயற்கை வாழ்வே! மற்றவர்களின் உயிரைக் கவர்ந்துகொண்டுவிட்டதுபோல் என் உயிரையும் விரைந்து கவர்ந்துகொண்டு விடு! என்னை உயிரோடு உலவவிட்டு செயற்கை வாழ்வால் நிகழ்த்திய முறைகேட்டுச் செயல்களைத் திரும்பத் திரும்ப எண்ணவைத்து என்னை நானே சித்திரவதைக்குள்ளாக்கிக் கொள்ளும் நிலையில் விட்டுவைக்காதே! என் வாழ்வை விரைவில் முடித்துக் கொடுத்துவிடு. என் உயிரை உடனே எடுத்துக்கொண்டு விடு'' கதறிக்கொண்டு தரையில் வீழ்கிறான். மாளிகை வாசி.

குப்பத்துவாசிகள் அவன் வீழ்ந்து கிடக்கும் பரிதாபத்தைப் பார்க்க முடியாமல் திரும்பிச்செல்கின்றனர் "பாவம்,பெருமாளிகைக்கும், பெரும் பொருளுக்கும், பேரதிகாரத்திற்கும் உரியவனாகிவிட்ட இவனுக்கு உள்ளமும் இருந்திருக்கக்கூடாது!''என்று அவர்கள் தமக்குள் பேசிக்கொண்டு போகின்றனர்.

★

# "வாழ்வு மலர்ந்தது"

இரவு மணி இரண்டிருக்கும். நான் சென்னை மாநகரின் வீதி ஒன்றில் நடந்துகொண்டிருந்தேன். வானத்திலே கரு மேகமற்ற நிலா வெளி வந்துகொண்டிருந்தது — எனது வாழ்வைப் போல.

ஆமாம் என் வாழ்வு இன்பகரமாகத்தான் ஓடிக்கொண்டிருந்தது. நான் ஒரு அரசாங்க அதிகாரி; அதாவது போலீஸ் இன்ஸ்பெக்டர். சென்னையில் அல்ல. சென்னைக் கப்பால் 300 கல் தொலைவிலுள்ள ஓர் ஊரில். அங்குதான் எனது குடும்பம் இருந்தது. அதாவது எனது பெற்றோர் மட்டும்தான் இருந்தனர். எனக்குத் திருமணம் ஆகவில்லை. எனது அத்தை ஒருத்தி முன்பு இருந்தாளாம். அம்மா சொல்லக் கேள்வி, நான் அறியேன். அதிக சொத்துக்கள் இருந்தமையால், எங்கள் குடும்பத்திலிருந்த நானோ எனது பெற்றோரோ துன்பமே கண்டறியாதவர்கள்.

நான் சென்னையைச் சுற்றிப் பார்ப்பதற்காக இரண்டு மாத ஓய்வு பெற்றுக்கொண்டு வந்திருந்தேன்.

நான் சென்னை வீதியிலே வந்துகொண்டிருந்தது எனது வழக்கமான வேலையல்ல. படக்காட்சியொன்றைப் பார்த்துவிட்டு, அமைதியாகச் சென்னையை எண்ணி வியந்தபடியே சிந்தனையோடு வந்துகொண்டிருந்தேன். "சார்" என்ற குரல் கேட்டது. எனக்கு வியப்பு மேலிட்டது. காரணம் என்னை அறிந்தவர்கள் யாருமே சென்னையிலே கிடையாது. அதுவும் இரண்டு மணிக்கு அழைப்பது வியப்பிலும் வியப்பு' குரல் வந்த பக்கம் நோக்கினேன். யாரோ கையை அசைத்துச் சாடையாகக் கூப்பிட்டார்கள். இருபது வயதான எனது வாலிப உடம்பிலே கழுத்திலே சிறு தங்கச் சங்கிலி மின்னிட அந்த ஒளியிலே அழகுத் தேவனாக அந்த உருவத்தின் முன் நின்றேன் — திடுக்கிட்டேன். காரணம்? அவள் ஒரு பெண். சிறு வயதினளல்ல; கிழவியும் அல்ல. பதினெட்டு வயது சொட்டும் பருவ மங்கை. என்ன என்று கேட்கக்கூடத் துணிவற்று, சுற்றுமுற்றும் பார்த்தவாறு மிரள மிரள விழித்தேன்.

அவள் புன்னகை காட்டிச் சிரித்தாள். என் தலை கிறுகிறுப்படைந்தது. தமிழ்ப் பெண்ணா? என்று நோக்கினேன். சந்தேகமில்லை. தமிழ்ப் பெண்தான். பயந்தேன். அவள் சிரித்தவாறு என் கையைப் பற்றி இழுத்தாள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நான் இதுவரை கண்டிராத நிகழ்ச்சி. மீண்டும் விழித்தேன். மிரள மிரள விழித்தேன். நெஞ்சோ படபடவென்று அடித்துக்கொண்டது. அவள் மறுபடியும் சிரித்தாள்." ஏன் பயப்படுகிறீர்கள்? சும்மா வாங்க என்று எனக்கு மயக்கத்தை உண்டாக்கினாள். அப்பொழுதுதான் எனக்குப் புரிந்தது. நான்; வாலிபன் — இளவயது—இன்பங்காணும் வயது—காலமோ இரவு பால் நிலவு — பார்த்துவந்த படக்காட்சியின் பெயரோ "முதல் இரவு" ஆங்கிலப் படம். என் நாக்கு உருசி கூட்டியது. என் உதடுகள் துடித்தன. எதிரே இள மங்கை!

அழ. வீரப்பன்

என் எண்ணமெல்லாம் இன்பமயமாயின. ஆகா? இன்பம்...இன்பம் ... ஆனால்... ஆனால்... நான் யார்?

**ஆமாம் நான் யார்? பாதுகாவலன். போலீஸ் இன்ஸ்பெக்டர். ஆமாம், வேலியே பயிரை மேய்ந்தால்...? எண்ணினேன் நன்றாக எண்ணிப் பார்த்தேன்... கடமை என்னைத் தடுத்தது. கட்டியணைக்கக் கரங்கள் துடித்தன. என் மனமே போர்க்களமாகிவிட்டது. கடைசியில் என் கடமை வென்றது. அவளை நோக்கினேன். அவள் என்னை நெருங்கி வந்துகொண்டிருந்தாள். கணநேரம் தப்பியிருந்தாலும் நான் அவளுக்கு அடிமையாகியிருப்பேன். அவளை உலுக்கினேன். அவள் சிரித்தாள். என் முகம் கடுமையாகியது. என் குரலும் கடுமையாகியது.**

**"நான் யார் தெரியுமா?" கேட்டேன். "எனதாருயிர் நாதன்" செல்லமாகத் தட்டினாள். "நான் போலீஸ் இன்ஸ்பெக்டர்" அதிகாரி போல் கத்தினேன். அவள் முகம் வெளிறியது. பயம் குடிகொண்டது. அவள் தன்னையறியாமல் என் காலைப் பணிந்தாள்.**

**"சார் இனிமேல் இதுபோல் செய்யமாட்டேன்; என்னை விட்டுவிடுங்கள் சார். உங்களுக்குக் கோடி புண்ணியம்" கண்ணீர்விட்டாள். என்மனம் —தமிழ்மனம்— இளகியது.**

**"ஏன் இப்படி மாறினாய்?" என்று வினவினேன். எனக்கு இதுதான் முதல் தடவை. எனது தொழிலல்ல இது. ஆனால் சாகக்கிடக்கும் என் அன்னைக்குக் கஞ்சி கொடுக்கக்கூட அரிசி வாங்கக் காசில்லை. படுத்த படுக்கையாய்க் கிடக்கிறார்கள். என்னன்னை என்னை இப்பருவம் வரை வளர்க்க என்ன பாடு பட்டிருப்பார்கள்! அவர்களுக்கு உதவ—என்னைக் காப்பாற்றிய அன்னையைக் காப்பாற்ற எண்ணினேன்;**

வேறு பிழைப்பில்லை. கடைசியில் இதுவரை காக்கப்பட்ட மானத்தை என் தாய் அறியாமல் என் தாயின் மேல் கொண்ட அன்பின் காரணமாக இரண்டு ரூபாய் மதிப்பிட்டேன்; மன்னியுங்கள். நான் இனி இப்படிச் செய்யவேமாட்டேன். இது உறுதி. என்று தலைகுனிந்தவாறு கண்ணீர் விட்டாள் அவள். அவள் கதையைக் கேட்டேன் — கண்ணீரைப் பார்த்தேன், என் கண்களிலும் இரு சொட்டுக் கண்ணீர்த்துளிகள் துளிர்த்தன. துடைத்துக்கொண்டேன். என்ன செய்வதென்று யோசித்தேன். அதற்குள் என் பின்னுல் யாரோ பேசும் குரல் கேட்டுத் திரும்பினேன். ஒரு இன்ஸ்பெக்டர் வந்துகொண்டிருந்தார்; "சார் நடந்ததெல்லாம் பார்த்துக்கொண்டு தான் சார் இருந்தேன். நீங்கள் அப்பாவி. இந்தக் கள்ளியை நம்பி விட்டீர்கள். இவர்களெல்லாம் இப்படித்தான் சார் ஏமாற்றுவார்கள். பெரிய கைகாரிகள்." என்று என்னிடம் சொல்லிவிட்டு அந்தப் பெண்ணை இழுத்தார். அவள் கெஞ்சினுள். கால்களில் விழுந்து கெஞ்சினுள்; பயனில்லை. இன்ஸ்பெக்டர் பலவந்தமாக இழுத்தார். அவள் அழுதாள் — என்னைப்பார்த்து அழுதாள். இன்ஸ்பெக்டர் விட்டுவிடாமல் இழுத்துக்கொண்டு சென்ருர். அவள் அலறினுள். என்னைப் பார்த்து அலறினுள். எனக்கும் அழுகை வரும்போலிருந்தது. மனதை இரும்பாக்கிக்கொண்டேன்; பேசாமல் நடந்தேன். "நல்ல மெட்ராஸ்" என்று என் வாய் முனகியது. பேசாமல் என் அறையை, அதாவது நான் தங்கியிருந்த ஓட்டலை நோக்கி நடந்தேன்.

எப்படியோ ஒரு வழியாக ஓட்டலுக்கு வந்து சேர்ந்தேன். மாடியில் தான் எனது அறை இருந்தது. அனைவரும் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு ஊறுவிளைவிக்காவண்ணம் என்கைகளில் மிதியடிகளை எடுத்துக் கொண்டு மாடிப்படியில் ஏறினேன். எனது அறைக்குச் சமீபம் வந்து விட்டேன். அப்பொழுதுதான் என் பக்கத்து அறையில் மின்சார விளக்கு எரிவது தெரிந்தது; எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது. நேற்று மாலை யாருமே அந்த அறைக்கு வந்ததில்லை. இப்பொழுது விளக் கெரியக் காரணம்? அதன் பின்னுல் யாராவது வந்திருக்கலாமல்லவா? என்னை • நானே திருப்திப்படுத்திக் கொண்டேன். ஆனுல்? அடுத்த வினுடி அங்கிருந்து வந்த பேச்சுக்களைக் கவனித்தேன். பகீரென்றது.

"சீ! நாயே! நான் இறந்தாலும் இறப்பேனே தவிர, உனக்கு இணங்க மாட்டேன்" இது ஒரு பெண்ணின் குரல்—கேட்டகுரல்போல் இருந்தது. "என்னடி ஒரேயடியாத் துள்ளுறே, இந்தக் கேடிக்கிட்டேயா உன்னுடைய வீராப்பு" என்ற ஆணின் குரல் ஒன்று தொடர்ந்து கேட்டது. கேட்ட குரல்போல் காணப்பட்டது. நினைவில்லை. எனக்கு ஒருவாறு சமாச்சாரம் புரிந்துவிட்டது! யாரோ ஒரு பெண்ணை ஒருமுரடன் கெடுக்க எண்ணுகிருன். என்ன செய்வ தென்று யோசித்தேன். நிலைமை மோசமாகிவிடும்போலிருந்தது. பட்டென்று எனக்கு ஒரு யோசனை தோன்றியது. உடனே வந்த சுவடு தெரியாமல் கீழிறங்கி வந்தேன். ஓட்டல் மானேஜரின் அறைக்குச் சென்று எனது கைவிளக்கை அடித்துப் பார்த்தேன். அங்கு படுக்கை விரிக்கப்பட்டிருந்தது—ஆளில்லை. எனக்கு ஏமாற்றமாகி விட்டது. என்ன செய்வதென்று எண்ணியவாறே மறுபடி மேலே சென்றேன். விளக்கெரிந்துகொண்டிருந்த அறையின் சாவித்துவாரத் தின் வழியாகப்பார்த்தேன். அங்கு ......? நம்பவே முடியவில்லை! சற்று முன்பு நான் சந்தித்த பருவப் பெண்ணை — இன்ஸ்பெக்டர்போல் என்னிடம் பேசியவன் கற்பழிக்க எத்தனித்தான்.

இதுதான் சென்னையா? நான் என்னையே கேட்டுக்கொண்டேன். இன்ஸ்பெக்டர்போல் நடித்தவன் ஒரு ரௌடி! நான் வியந்து போனேன். நல்லவர்வாழ இடமில்லையா?

நான் ஆடாது அசையாது என் உடல் வியர்க்க — உள்ளந்துடிக்கத் துவாரத்தின் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

"அய்யா என்னை விட்டுவிடுங்கய்யா. நீங்க நல்லா இருப்பீங்க" என்று அழாக் குறையாகத் தன் கைகளைக் குவித்தாள் அவள். "மல்லிகா நல்லமுறையிலே சொல்லு கிறேன். அந்தத் தெருவிலே வந்தவனிடம் இரண்டு ரூபாய்க்குக் கெஞ்சினுய் — நான் இரண்டு பத்துரூபாய்கள் தருகிறேன்" என்ருன் ரௌடி.

"மல்லிகா என் மனம் மலர்ந்தது" ஆமா பொண்ணு; நம்ம ரௌடிஎன்ன கஷ்டப்பட்டுஉன்னைக் கொண்டுவந்திருக்கு; பிகு பண்ணுதம்மா, அதனுலே என்ன லாபம்? பேசாமே......" அருகில் நின்றவன் தொடர்ந்தான். "சீ......நாயே பேசாதே! வாழ்க்கையில் ஒரேஒரு முறை எனது அன்புத் தாயைக் காப்பாற்றுவதற்காக எனது கற்பை விலைகூற முயன்றேன். ஆனுல் அவர் எனக்கு நல்லுரை வழங்கினுர். உத்தமர். இனி என்னுயிர் போனுலும் என் கற்பைப் பறிகொடுக்கமாட்டேன்!" என்று அலறினுள் அவள்—மல்லிகா. எனக்கு அளவிலா மகிழ்ச்சி! "அதையுந்தான் பார்த்துவிடலாம்" என்றவாறு அந்த ரௌடி மல்லிகாவின் சேலையைப் பிடித்து இழுத்தான். அவள் கதறினுள். அவன் பிடியை விடவில்லை.

நான் பதறினேன். பொறுக்க முடியாமல் கதவைப் படபடவென்று தட்டியும்விட்டேன். உள்ளே இருந்தவர்கள் அதிர்ச்சிக்குள்ளாயினர். ரௌடி மெதுவாகக் கதவருகில் வந்தான்.

நான் அப்பொழுதுதான் தனியாள் என்பதை உணர்ந்தேன். இருந்தாலும் மனவலியை இழக்காமல் சுவரோரமாக ஒளிந்து கொண்டேன். ரௌடி கதவைத் திறந்து வெளியில் மெல்லத் தலையைக் காட்டினுன். அடுத்த கணம் என் கைவிளக்கு அவன மண்டையைப் பதம்பார்த்தது. அவன் "ஐயோ"வென்றவாறே விழுந்தான். அதேசமயம் உள்ளே ஏதோ உருளுவதும் ஒரு அலறலும் தொடர்ந்து கேட்டது.

ஓடிச்சென்று பார்த்தேன். மற்றவன் சுருண்டுகிடந்தான். அவனருகில் பூத்தொட்டி உருண்டுகிடந்தது. அவனருகில் மல்லிகா பெருமிதத் துடன் நின்ருள். நான் அவளை நன்ருகப்பார்த்தேன். விளக்கொளியிலே கவனித்தேன். அழகு இராணியான அவள், அனுதை என்ற காரணத்தால் மங்கியிருந்தாள். நான் அவளையே சிறிது நேரம் பார்த்தேன். அவள் ஏனே நிலம் நோக்கினுள். சில நிமிடங்கள் கழிந்தன.

"என் தாயைப்பார்க்க வேண்டுமென்ருள். கால்ங்காட்டியை நோக்கினேன். சரியாக மணி 3. நானும் அவளுடன் புறப்பட்டேன். முதலில் பாதுகாவலர் நிலையஞ்சென்று புகார் செய்துவிட்டு அவளுடன் இல்லத் திற்குப் புறப்பட்டேன். அவள் சென்ருள் — நான் உடன் சென்றேன். எனக்கு அதிலே கிடைத்த இன்பம் சொல்ல இயலாது. அவள் கடைசி

யாக ஒரு பிளாட்பாரத்திற்கு வந்தாள். அங்கே ஒரு மூலையில் ஒரு உருவம் சுருண்டு படுத்திருந்தது. அவள் அதனருகில் சென்றாள். நான் வியப்படைந்தேன். இதுதான் அவர்கள் வீடா? ஐயோ! தமிழகமே! என்செய்வது? அவள் அந்த உருவத்தின் அருகில் உட்கார்ந்தாள்.

"அம்மா" என்றாள் அவள்—மல்லிகா.

பதிலில்லை.

மறுபடியும் "அம்மா" என்றாள்.

பதிலில்லை.

மறுபடியும் உரக்க "அம்மா" என்றாள்.

பதிலில்லை.

தட்டி எழுப்பி "அம்மா" என்றாள்; பதிலே இல்லை. அடுத்த கணம் அந்த இடம் அதிரும்படி "அம்மா" என்ற அலறல் கேட்டது. மல்லிகா தன் தாயின்மேல் விழுந்து அலறினாள். நான் அவள் தாயின் மூக்கில் விரலைவைத்துப்பார்த்தேன். மூச்சில்லை. உடல் சில்லிட்டுப் போயிருந்தது.

அவள் அழுதாள்—நான் அழாத குறை—கண்ணீர் மட்டும் தடையில்லாமல் வழிந்துகொண்டிருந்தது. அடுத்த கணம்? மல்லிகா எழுந்து ஓடலானாள். எங்கே? என்னை நானே கேட்டுக்கொண்டேன். "மல்லிகா" என்றேன், திரும்பிப் பாராமல் ஓடினாள். நானும் ஓடினேன். விடாது ஓடினேன். "ஓ" என்ற பேரொலியுடன் புகை வண்டி வருவது தெரிந்தது. அதை நோக்கியே ஓடினாள். எனக்கு எல்லாம் புரிந்துவிட்டது. ஓடினாள் — எப்படித்தான் ஓடுகிறாளோ? நான் பலங்கொண்ட மட்டும் ஓடினேன். அவள் பெண்தானே! பிடித்துவிட்டேன். திமிறினாள். விடவில்லை. புகைவண்டி எங்களைக் கடந்தது.

"மல்லிகா" என்றேன்.

என்னை ஏன் தடுத்தீர்கள். என் தாய் உயிருடன் இருக்கும்பொழுதே என்னைச்சூறையாட நினைத்தார்கள். இனி என் தாய் மாண்டவுடன் நான் மானத்துடன் வாழமுடியாது.

மானமின்றி வாழ்வதைவிட மாண்டுவிடுவதே நல்லது. என்னை ஏன் தடுத்தீர்கள் என்றவாறு விசித்து விசித்து அழுதாள். நான் அப்பொழுது பெண்ணாகவே மாறிவிட்டேன். நானும் அழுதேன். 'மல்லிகா கவலைப்படாமல் என்னுடன் வா" என்றேன் அவள் ஏனோ தயங்கினாள். நான்விடவில்லை. "என்னை நம்பு மல்லிகா" என்றவாறு அழைத்து வந்துவிட்டேன்.

மறுநாள் என் பெட்டி படுக்கைகள் வேறு ஓட்டலுக்குக் குடிசென்றன. எனது 10 ரூபாய் நோட்டுகள் பல சில்க் சேலையாகவும், ஜாக்கெட்டாகவும், ஜிமிக்கியாகவும் வளையலாகவும் மாறி மல்லிகாவின் உடம்பிலே ஏறின. அப்பொழுது அவள் அழகு! உங்களிடம் சொல்லக்கூடாது. பிறகு எனக்கு ஆபத்துத்தான். சில நாட்கள் அவளும் நானும் நல்ல முறையிலே பழகினோம். எனக்கு வீட்டின்மேல் விருப்பம் உண்டாயிற்று. உடனே மல்லிகாவுடன் எனது சொந்த ஊருக்குப் பெருமையுடன் புறப்பட்டேன்.

வேலைக்காரன் வண்டியிலிருந்து சாமான்களை எடுத்துக்கொண்டு வீட்டினுள் சென்றான். என் தாயும் தந்தையும் முகமலர்ந்து என்னை வரவேற்றனர். ஆனால்? மல்லிகாவைக் கண்டதும் அவர்கள் முகம் மாறியது. தகப்பனார் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார். நான் ஒருவாறு புரிந்துகொண்டேன். "அப்பா தாங்கள் நினைப்பதுபோல் அப்படியொன்றுமில்லையப்பா" என்று அப்பாவின் சந்தேகத்தை ஒழித்துவிட்டு நான் குளிக்கச் சென்றேன்.

ஒருவாறு பகலுணவு முடிந்தது. அனைவரும் உல்லாசமாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அம்மாவும் அப்பாவும் வெற்றிலை பாக்குப் போட்டுக்கொண்டு இருந்தனர். நானும் மல்லிகாவின் சோகக் கதையைவிடாது கூறினேன். அம்மாவும், அப்பாவும் பரிதாபப்பட்டனர். அம்மாதான் மெத்தக் கவலைப்பட்டார்கள். அவர்கள் பெண்ணல்லவா?

அம்மா நீ யாரம்மா? என்று பரிவோடு கேட்டார்கள். மல்லிகா தன் சரித்திரத்தைக் கூறத் தொடங்கினாள். சரித்திரப் பாடத்தை விரும்பாத நான் அவள் சரித்திரத்தைச் சுவையோடு கேட்கலானேன்.

"என் தாயும் இதே ஊர்தான், பெயர்"சொர்ணம்"எனத் தொடங்கினாள். என்ன? சொர்ணமா? என்றாள் அம்மா! அப்பா கூர்ந்துகவனித்தார். "ஆமாம்" என் அம்மா சொல்லக் கேள்வி. என் அம்மா பெயர் சொர்ணம்தான். அம்மாவைப் பிடிக்காத மாப்பிள்ளைக்குத் திருமணம் செய்துவைப்பதற்காக அவள் சகோதரன் பாடுபட்டாராம். அம்மா எவ்வளவோ சொல்லியும் கேட்காததால், திருமண முதல் நாளிரவாயிருக்கும் பொழுது யாருக்கும் தெரியாமல் சென்னைக்கு ஓடி வந்துவிட்டார்களாம். மல்லிகா சொல்லிக்கொண்டிருந்தாள். ஆனால் என் தாயார் அழுதுகொண்டிருந்தார்கள். அப்பாவின் கண்கள் கலங்கியிருந்தன. ஏனோ?

மல்லிகா தொடர்ந்தாள். மெட்ராசுக்கு வந்ததும் தெரியாத்தனமாக ஒருவனை நம்பிவிட்டார்கள். அவன் சிலநாட்களுக்கு வைத்திருந்துவிட்டுப் பிறகு ஓடிவிட்டான். அதனால் நான் பிறந்தேன்.

அப்பாவும் அழ ஆரம்பித்தார்.

மல்லிகா மேலும் தொடர்ந்தாள். என்னை நல்லமுறையிலே வளர்த்து, முடிந்த மட்டும் எனக்கு எழுதப் படிக்கக்கற்றுத்தந்தார்கள். எனக்கு என்னவோ ஒரு திருப்தி! நான்வளர்ந்தேன். நல்ல முறையிலேயே என்னை அம்மா வளர்த்தார்கள். நாட்கள் பல சென்றன. திடீரென்று ஒரு நாள் அம்மா நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். பிறகு நடந்ததுதான் உங்களுக்குத் தெரியுமே என்று முடித்தாள் அவள்—மல்லிகா.

"உன் தாயின் சகோதரன் பெயர் தெரியுமா அம்மா?" என்றார் என் அப்பா.

பெயர் 'சங்கரம் பிள்ளை' என்றாள் மல்லிகா. சங்கரம் பிள்ளை என் அப்பாவின் பெயராயிற்றே! நான் திகிலடைந்தேன். "ஐயோ மருமகளே நான்தான் உன் மாமா" என்றார் அப்பா. "என் செல்வமே" என்று கட்டிப் பிடித்துக்கொண்டார்கள் என் அம்மா.

நான் அடைந்த மகிழ்வுக்கு எல்லையே இல்லை. மல்லிகாவை ஓரக் கண்ணால் பார்த்தேன். அவள் கன்னங்கள் ஏனோ சிவப்பேறின. அவள் புன்னகை செய்தவாறே குனிந்தாள். இதைப் பார்த்துவிட்ட வேலைக்காரன் முனுசாமி என்னைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினான்,

அந்தச் சிமிட்டு "சின்ன எசமான் ஒங்களுக்கும் மல்லிகா அம்மாவுக்கும் இந்தமாசமே திருமணந்தான்" என்று சொல்வதுபோல் இருந்தது.

எனது வாழ்வும் அவளது வாழ்வும் ஒன்றி மலர்ந்தது.

★

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

2-ம் பக்கத் தொடர்ச்சி

கொண்டு ஒருமுறை தன் குல தெய்வங்களையெல்லாம் மனதிற்குள் வேண்டிக்கொண்டான். கடைசியாக நினைவு மறக்காமல் நிதானித்து வலதுகையால் கதைப் பெட்டகத்தைப் பெட்டியின் துவாரத்துக்குள் செலுத்தினான். அவன் போட்ட அஞ்சல் இன்னும் சிறிது நேரத்தில் அங்கிருந்து எடுத்துச் செல்லப்படும். உரிய இடத்தில் சேர்க்கப்படும்; ஆசிரியர் பார்ப்பார், படிப்பார்........இதற்குமேல் அங்கே நின்றுகொண்டு அவனால் கற்பனை செய்ய முடியவில்லை. வீடு நோக்கிப் புறப்பட்டான்.

போட்டியின் முடிவு நாள் நெருங்கியது...... கடந்தது.

முடிவு அறிவிப்பு வரும் நாளை எண்ணிக்கொண்டேயிருந்தான் செல்வன். "வஞ்சம்" வாரப் பத்திரிகை வந்ததும் அவன் தேடுவதெல்லாம் அதுதான்.

இரண்டு மாதங்கள் ஓடின!

போட்டியின் முடிவை அன்று வரும் இதழில் வெளியிடுவதாக முன் இதழிலேயே அறிவித்திருந்தபடியால், காலையில் எழுந்ததும் சாப்பிடாமல் கூடக் பத்திரிகை விற்பனையாளரின் கடையில் போய் உட்கார்ந்து கொண்டான். அப்பொழுது அவனுக்குப் பசி எழவில்லை, மயக்கம் வரவில்லை. வேறெந்தச் சிந்தனையும் அவன் மனதில் இடம்பெறவில்லை.

பத்திரிகை வந்தது, ஆவலுடன் படபடவென்று போட்டி முடிவைத் தேடித் தாள்களைப் புரட்டினான் செல்வம். எட்டாம் பக்கத்தில் போட்டி முடிவு வெளியாகியிருந்தது. அவன் எழுதிய "காதலில்லாக் கதை"தான் முதற்பரிசைத் தட்டியிருந்தது! ஆனால், அவன் பெயர் போடவில்லையே! ஏன்? வேறு பெயரைக் கூடக் காணோமே.

அவன் ஏதும் புரியாமல் விழித்தான், திகைத்தான். ஒரு வேளை... சே, சே, அப்படியெல்லாம் இருக்காது. எதை மறந்தாலும் பெயரை எழுத மறப்பேனா. எதற்கும், பொங்கல் இதழில் கதையை வெளியிடுவதாகப் போட்டிருக்கிறார்களே, அதுவரைக்கும் பொறுத்திருந்து பார்க்கலாம். அதற்குள் பத்திரிகை ஆசிரியரும் அறிவிக்காமலா போய் விடுவார். குறைந்த பட்சம் கதையுடன் வெளியிட என் புகைப் படத்தையாவது கேட்டு எழுது வாரே. பலவாறாகச் செல்வன் தன் சிந்தனையைச் செலுத்திவிட்டு, முடிவில் ஓரளவு மனத்திருப்தியுடன் சஞ்சிகையை வைத்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தான்.

பொங்கல்—பொங்கல்-பொங்கல் இவைகள்தான் அவன் சதா முணு முணுத்த மந்திரவார்த்தைகளெல்லாம்.

அவன் மந்திரமும் பலிதமானது. "வஞ்சம்" பொங்கல் இதழின் விலை அதிகமாகவிருந்தமையால், முன் கூட்டியே பெயர்களைப் பதிவுசெய்து கொண்டவர்களுக்கு மட்டுமே இதழ்களை வரவழைத்திருந்தார் விற்பனையாளர். அதுவும் வந்தவுடனேயே விநியோகித்தும் விட்டார்! செல்வனின் பார்வையிலிருந்து "வஞ்சம்" வெகுதூரத்திற்கப்பால் சென்றுவிட்டது.

இப்பொழுது அந்தப் பொங்கல் இதழின் ஒரு தாள்தான் அவன் கையில் வடையைக் கொடுக்க வந்திருக்கிறது. அதுவும் அவன் எழுதிய "காதலில்லாக் கதை" அச்சாகியிருந்த தாள்!

ஓட்டமும் நடையுமாக வீட்டிற்கு வந்தான் செல்வன். எடுத்தான் வெள்ளைப்பேப்பரொன்றை, தொடுத்தான் அதில் பேனாவின் நுனியை. தீட்டுவதற்கு என்று தமிழிலிருந்த சொற்களையெல்லாம் தேடிப் பிடித்து அவற்றைத் தாளில் நிரப்பினான். பதின்மூன்று காசுகள் அதிகமாகிவிட்டாலும் பாதகமில்லையென்று எண்ணிக்கொண்டு, கடிதத்தைத் துரித அஞ்சலாகப் பெட்டியில் போட்டான்.

மூன்று நாட்கள் கழித்து பதில் வந்தது "வஞ்சம்" பத்திரிகை ஆசிரியரிடமிருந்து. அடக்க வொண்ணா ஆவலுந்தித்தள்ளக் கடிதத்தைப் பிரித்துப் படித்தான் செல்வன். நீங்களும்தான் கடிதத்தைப் படியுங்களேன்.

அன்புடைய செல்வத்திற்கு,

வணக்கம். தங்கள் ஊரினின்று வந்த "காதலில்லாக் கதை"யைப் பார்த்தேன். போட்டிக்கு வந்த கதைகளுள் மேற்கண்ட கதையே சிறந்ததாகத் தெரிந்ததால், அதையே முதற்பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுத்தேன். ஆனால், கதையை எழுதியவரின் பெயரோ முகவரியோ கதையுடன் வரவில்லை. எனவே வேறு கதையைத் தேர்ந்தெடுக்கலாமா என்றுகூடச் சிந்தித்தேன். எங்கள் ஆசிரியர் குழுவோ, இந்தக் கதைக்கு ஈடான சிறந்த கதை ஒன்றுமே வரவில்லையாதலால், இதையே பிரசுரிக்கவேண்டுமென்று கண்டிப்பாக வலியுறுத்திவிட்டார்கள். அதன்படி பிரசுரித்தோம்.

இவ்வளவு நாட்களுக்கும் பிறகு "காதலில்லாக் கதை"யை எழுதியது நான்தானென்று நீங்கள் எழுதியிருக்கிறீர்கள். ஆனால் உங்களுக்கு முன்பே, பிரசுரமாகிய கதையைக் காபிஎடுத்துக்கொண்டு, கதையை எழுதியவரென்று மனுப் போட்டிருக்கும் எத்தர்—எழுத்தாளர்களின் தொகை என்ன தெரியுமா? நீங்கள் அவசியம் தெரிந்துகொள்ளத்தான் வேண்டும். பரிசுத்தொகை ஆயிரத்தைப் பகிர்ந்தாலும் நபருக்கு நயா பைசா நான்கு தேருது. எனவே பரிசுத் தொகையைப் பத்திரிகை வளர்ச்சி நிதிக்குப் பயன் படுத்தலாமாவென அறிவிப்புச் செய்ய விரும்புகின்றோம். தங்கள் எண்ணத்தை எழுதுங்கள்.

அன்புள்ள,
**ஆதிமூலம்,**
ஆசிரியர்.

★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.